egistered as a News paper In Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு
சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

EELANADU

தபால் பெட்டி எண் 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்: 208
தேசிய தினசரி

ஈழநாடு
சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் ஆவணி 23 ஜ: ஆகிர் 25 திங்கட்கிழமை [8-9-69]

# சதி வழக்கில் மேஜர் ஜெனரல் உடுகம உட்பட மூவர் விடுதலை

கொழும்பு, திங்கள்
சதிவழக்கில் 4-ம் எதிரியான முன்னாள் ராணுவ தளபதி மேஜர் ஜெனரல் உடுகம நேற்றுக் காலை விடுதலை செய்யப்பட்டார் இவருடன் மற்றுமிருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

1966-ம் ஆண்டு மார்ச்சில் அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கை விசாரணைசெய்த சதிவழக்கு விசாரணை நீதிமன்றநீதியரசர் பி. ஏ. சில்வா மூன்று எதிரிகளையும் விடுதலை செய்தார்.

ஜூரிகளில்லாத சமயத்தில் அட்டோர்னி ஜெனரல் திரு. ஏ. சி. அமீர் தமது தமது தொகுப்புரையை சமர்ப்பித்தார்.

இதனையடுத்து நீதியரசர் 11-55 மணிக்கு இத்தீர்ப்பை வழங்கினார்

5-ம் எதிரியானகாப்டன் எல். ஜி. சிகேரா, 20-ம்எதிரியான சார்ஜன் எல். டி. பியசேன ஆகியவர்களே விடுதலைசெய்யப்பட்ட மற்றிருவர்களாவர்.

## யாழ். சுங்க காரியாலய கொள்ளை

# மாங்குளம் காட்டுக்குள் ஜீப்வண்டி கைப்பற்றப்பட்டது

## பொருட்கள் மீட்கப்படவில்லை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் சுங்கக்கந்தோரில் கிடந்த கடத்தல் பொருட்களை களவாடிய கொள்ளைக் கோஷ்டியினரால் கடத்திச் செல்லப்பட்ட சுங்கப்பகுதிக்குச் சொந்தமான 5 சிறீ 'வில்லிஸ்' ஜீப் வண்டி நேற்று நள்ளிரவுக்கும் அதிகாலைக்குமிடையில் மாங்குளத்திலிருந்து 3 மைல் தூரத்துக்குள் நடுக்காட்டில் தேடுவாரற்றுக் கிடக்கக் காணப்பட்டது. வவனியா பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு இராமநாதன் தலைமையில் சென்ற ஆயுதம் தாங்கிய பொலிஸ் கோஷ்டி இதனைக் கண்டுபிடித்துள்ளதாக பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்குத் தகவல் கிடைத்துள்ளது.

கடந்த 5-ம் திகதி நள்ளிரவுக்குப் பின்னர் யாழ்ப்பாணம் சுங்கக் கந்தோர் களஞ்சிய அறையில் நடைபெற்ற இத் துணிகரக் கொள்ளை சம்பந்தமாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை களவு போன பொருட்களும் எதுவும் இன்னமும் அகப்படவில்லை

கொழும்பிலிருந்து வரவ... [illegible]

களவு போன பொருட்களின் பெறுமதி இன்னமும் மதிப்பிடப்படவில்லை. 6-ம் திகதி அதிகாலையில் குறிப்பிட்ட சுங்க ஜீப் சந்தேகத்திற்கிடமில்லாத வகையில் ஆனையிறவு தடை... கூடாக வவுனியா ... மூவருடன்சென்றதாகவும் சுங்க 'ஜீப்' ... [illegible]

# திரைப்படங்களில் ஆபாசக் காட்சிகள்

## தமிழ் நடிகைகள் எதிர்ப்பு

சென்னை, செப். 7

திரைப்படங்களில் துகில் உரிவது முத்தமிடுவது போன்ற ஆபாசக் காட்சிகளை புகுத்துவதற்கு தென்னகத்தைச் சேர்ந்த முக்கிய நடிகைகள் பலர் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள்.

படங்களில் முத்தக்காட்சிகளையும் உடைகளைக்களைற்றும் காட்சிகளையும் அவசியமான இடங்களில் புகுத்தலாம் என்று இந்திய திரைப்பட ஆலோசனைக் குழுவொன்று ஆலோசனை கூறியிருக்கின்றது.

நடிகை சரோஜாதேவி இதுபற்றி கருத்து வெளியிடுகையில் நம் நாட்டின் பண்பாட்டுக்கு இந்தக்காட்சிகள் முற்றிலும் மாறானவை என்று கூறினார்.

இம் மாதிரி நிகழ்ச்சிகள் பகிரங்கமாக நம் நாட்டில் நடைபெறுவதில்லையென்று நடிகை ஜெயலலிதா கூறினார், திரு ஜெமினி கணேசனும் இந்த ஆபாசக் காட்சிகள் திரைப்படங்களில் இடம் பெறுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்.

போர் ஓய்வு

## தெ. வியட்னும் நிராகரிக்கது

# "இ. போ. ச. அதிகாரம் பரவலாகவேண்டும்"

— கோப்பாய் எம். பி.

கொழும்பு, திங்கள்
கொழும்பிலேயே இ போ ச வின் அதிகாரங்கள் குவியலாக வைக்கப்பட்டிருக்கிறதென்றும், பிரதேசவாரியாக இந்த அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டால் தான்சிறந்த பஸ்சேவையை பொதுமக்கள் பெலமுடியுமென்றும் கோப்பாய் எம் பி திரு எஸ் கதிரவேலுப்பிள்ளை நேற்று ஆட்சிமன்றத்தில் யோசனை தெரிவித்தார்.

தேசியசேவை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு விவாதத்தில் அவர்கலந்து கொண்டு பேசுகையிகையிலேயே இவ்வாறுகூறினார்

பஸ் கட்டணங்கள் தரப்படுத்தப்பட வேண்டுமெனறும் அவர் வற்யுறுத்தினார் பருத்தித்துறை முகத்தை ஆழமாக்கவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இ போ சவை மீண்டும் தனியாரிடம் ஒப்படைக்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு கிடையாதென அமைச்சர் சுகததாசா கூறினார்

கைத்தொழில் மீன்பிடி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு விவாத்தில் கலந்து கொண்டு பருத்தித்துறை எம் பி திரு க துரைரத்தினம்பேசுகையில் நயினதீவு கடறபகுதியிலிருந்து எடுக்கப்படும் சங்குகளை ஏற்றுமதி செய்யலாமெனத் தெரிவித்தார் மீன்பிடிக்கு பெரிய இழுக்கைக்கப்பல்கள் பயனற்றதென்றும், இந்தக்கப்பல்களுக்கு தேவையான பெரிய பெரிய மீன்கள் கிடைப்பதில்லையென்றும் அவர் மேலும் கூறினார்

# 'திட்டமிட்ட கோஷ்டியினால் நடத்தப்பட்டவையல்ல"

## பயங்கரக் கொள்ளைகள் பற்றி ஐ. ஜி. பி.

கொழும்பு திங்கள்
சமீபத்தில் துப்பாக்கி முனையில் நடாத்தப்பட்ட மூன்று பயங்கரக் கொள்ளைகளும் திட்டமிட்ட ஒரு கேயஷ்டியினால் செய்யப்படவில்லை என்பது பொலிஸார் நடாத்திய புலன் விசாரணைகளிலிருந்து தெரிய வந்திருப்பதாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அலெரிக் அபயகுணவர்த்தன நேற்று தெரிவித்தார்.

செய்தி நிருபர் மகாநாட்டில் அவர் இத் கவலை வெளியிட்டார்.

யாழ்-மட்டக்களப்பு பஸ்ஸில் நடந்த கொள்ளை, எலகரா சம்பவம், யாழ். சுங்க நிலைய கொள்ளை சம்பந்தமாக குறிப்பிட்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இரகசியப் பொலிஸார் இவை சம்பந்தமாக தொடர்ந்து புலன் விசாரணை செய்கின்றனர் என்றும், வாழைசேனை பஸ் கொள்ளை சம்பந்தமாக 2 பொலிஸ்காரர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தெரிவித்தார்.

கள்ளக் குடியேற்றக்காரர் என்று ஒரு பொலிஸ் நிலையத்தில் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டவரை மறுபடியும் இன்னொரு பொலிஸ் நிலையத்தில் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படுவது குறித்து கேட்டபோது, 'இந்நிலைமை நீடிக்காதவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது, இனி இப்படியான புகாருக்கு இடமிருக்காத விதத்தில், முதலில் விசாரணைகுட்படுத்தப்பட்ட பொலிஸ் நிலைய பதிவுகள் மற்றைய பொலிஸ் நிலையத்துக்குக் கிடைக்க ஆவன செய்யப்பட்டுள்ளது' என்று கூறினார்.

# தாக்குண்டு மரணம்

## சந்தேகநபரை பொலிசார் தேடுகின்றனர்

யாழ்ப்பாணம், திங்.
குப்பிளானைச் சேர்ந்த 52 வயதான இளையதம்பி ஆறுமுகம் என்பவர் நேற்று மரணமானது சம்பந்தமாக அதே இடத்தைச் சேர்ந்த சுப்பையா ஆறுமுகம் என்பவரைப் பொலிஸார் தேடுகின்றனர்.

அடிவயிற்றில் பலமாகத் தாக்குண்டதாலேயே மேற்படி நபர் மரணமானதாக விசாரணையில் தெயரிவந்துள்ளது.

குப்பிளானில் நடைபெற்ற கைகலப்பொன்றில் இளையதம்பி ஆறுமுகம் பெரிய கல் ஒன்றினால் தாக்கப்பட்டதாக விசாரணையல்தெரிய வந்தது. காங்கேசன்துறை ஆஸ்பத்திரியிலிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டு மரணமானார். சந்தேக நபரை பொலிஸார் தேடுகின்றனர்

இறந்தவரது மரணம் சம்பந்தமாக நேற்று மல்லாகம் நீதிபதி எஸ் ஆனந்த குமாரசாமி விசாரணை நடத்தினார்.

(கா. நி; அளவெட்டி நிரு)

வடபகுதி அசைஸ் விசாரணை

# நாவற்குழி கொலை வழக்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் உடைகளைக்கூழ றும் காட்சிகளையும் அவசியமான இடங்களில் புகுத்தலாம் என்று இந்திய திரைப்பட ஆலோசனைக் குழு வொன்று ஆலோசனை கூறி நடிகை ஜெயலலிதா கூறினர், திரு ஜெமினி கணேசனும் இந்த ஆபாசக் காட்சிகள் திரைப்படங்களில் இடம் பெறுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கிருர்.

# தமிழ் பகுதிகளில் பல்கலைக்கழகம்

## கல்வி அமைச்சர் விரைவில் தீர்மானிப்பார்

கோட்டை, ஞாயிறு

தமிழ்ப் பகுதிகளில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவுவது பற்றிக் கல்வியமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை மிக விரைவில் தீர்மானிக்கவுள்ளார்.

தமிழரசுக்கட்சி, தமிழ்க்காங்கிரஸ்கட்சி ஆகிய இரண்டையும் அழைத்து ஒரு மகாநாடு நடத்தி, அதில் தமிழ்ப் பகுதிக்கான பல்கலைக்கழகம் வடபகுதியிலா அல்லது கிழக்குப் பகுதியிலா அமைவது என்பது பற்றிக் கல்வியமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிருர்.

இவ்விருபகுதிகளிலுமுள்ள பிள்ளைகள் உயர் கல்வி கற்பதற்கு, ஒரு பல்கலைக்கழகம் அவசியம்தானென்ற கருத்தைச் சமீபத்தில் கல்வியமைச்சர் வெளியிட்டுள்ளார். எனவே அவர் தமிழ்ப் பகுதிகளில் ஒரு பல்கலைக்கழகம் அவசியமென்பதை மேற்படி மகாநாட்டில் வற்புறுத்தவுள்ளார்.

இதே வேளையில் தமிழர்களின் இரு பெரும் கட்சிகளும் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமையவேண்டிய இடம் சம்பந்தமாக மாறுபாடான கருத்துடையதாக இருக்கின்றன.

இவ்விரு பகுதிகளுக்கு ஒரு பல்கலைக்கழகம் அமைப்பதில் தாமதம் ஏற்படுவதற்குக் காரணம், தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஆகிய இரு கட்சிகளுக்குமிடையேயுள்ள கட்சி வேற்றுமையாகும் எனக் கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# மட்டக்களப்பில் கலாச்சார விழா

அக்கரைப்பற்று, ஞாயிறு

இம்மாதம் 16, 17, 18ந் தேதிகளில் மட்டக்களப்பு முற்றவெளி மைதானத்தில் கலாச்சார விழா சிறப்பான முறையில் கொண்டாடப்படவிருக்கிறது. அரசாங்கம் நடாத்தவிருக்கும் இவ்விழாவுக்கான ஆயத்தங்களைச் செய்வதில் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு டி. நேசையா ஈடுபட்டுள்ளார்.

தொழில் அமைச்சர் ஜனுப் எம். முகமது, உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாச உணவு அமைச்சர் திரு. எம். டி. பண்டா ஆகியோர் கலாச்சார விழாவின் மூன்று நாள் நிகழ்ச்சிகளிலும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

தற்பொழுது நிறுவப்பட்டுக்கொண்டிருக்கும் இவ்விழாவுக்கான திறந்தவெளியரங்குக்கு 'மகாத்மா காந்தி' ஞாபகஅரங்கு எனப் பெயரிடப்படவிருக்கிறது.

## மகாத்மாவின் 'நவஜீவன்' பத்திரிகை

புதுடில்லி, செப் 7

மகாத்மா காந்தியால் நடத்தப்பட்ட 'நவஜீவன்' பத்திரிகையின் பொன்விழா இன்று கொண்டாடப்பட்டது 50 ஆண்டுகளுக்கு முன் நவஜீவன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது நவஜீவன் போன்ற விடுதலை இயக்கப் பத்திரிகைகளில் மகாத்மா அஞ்சாநெஞ்சுடன் தமது கருத்துக்களை எழுதிவந்தார் என்றுஇந்த விழாவில் பேசிய அனைவரும் குறிப்பிட்டார்கள்

ஜளஞ்சிய அறையில் நடைபெற்ற இத் துணிகரக்

போர் ஓய்வு

## தெ. வியட்னும் நிராகரித்தது

சைகோன், செப் 7

டாக்டர்ஹோ-சி-மின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக வியட்காங்கியர் அறிவித்த மூன்று நாள் போர்நிறுத்தத்தை தென்வியட்னும் நிராகரித்துவிட்டது முன்னர் இப்படியான தனது போர் ஓய்வு அறிவித்தல்களை வியட்காங்கியர் கௌரவிக்காததன் காரணமாகவே தென்வியட்னும் இந்த முடிவை செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டது

இன்னமும் அகப்படவில்லை

கொழும்பிலிருந்து வரவழைக்கப்பட்ட கைரேகை நிபுணர்கள் ஜீப்பிலிருந்து கைவிரல் அடையாளங்களை ப... செய்தார்கள். பொலிஸ் படப் பிடிப்பாளர்கள் ஜீப்வண்டியின் முக்கிய பகுதி களையும், களவு நடந்த இடங்களையும் படம் எடுத்தார்கள்.

## 40 பேர் பலி

நியுயோர்க், செப். 7

மெக்ஸிக்கோவில் அடைமழை காரணமாக 40 பேர் பலியாகியிருக்கிருர்கள். ஆயிரக்கணக்கானவர்கள் வீடுகளை இழந்திருக்கிருர்கள். கடந்த ஒரு மாதமாக இங்கு மழை தொடர்ந்து பெய்து கொண்டிருக்கிறது.

குறிப்பிட்ட சுங்க 'ஜீப்' சந்தேகத்திற்கிடமில்லாத வகையில் ஆனையிறவு தடைமுகாமுக் கூடாக வவுனியா நோக்கி மூவருடன்சென்றதாகவும் சுங்க 'ஜீப்' ஆனையால் அது ...சாதனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லையென்றும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளதாம்.

சந்தேக நபர்கள் மூவரும் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றும்பொலிஸ் விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளதாக உயர் தர பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சுங்க கந்தோரில் ஆயுதம் தாங்கிய பொலிஸார்காவல் புரிந்து வருகின்றனர். புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது. (கா. நி)

# இஸ்ரேலுக்கு மெரிக்க ஜெட்விமானம்

## அரபு நாடுகள் கண்டனம்

கெய்ரோ, செப் 7

இஸ்ரேலுக்கு அமெரிக்க பென்டம் ஜெட் போர் விமானங்கள் விநியோகிக்கத் தொடங்கியிருப்பதை அரபு நாடுகள் பல கண்டித்திருக்கின்றன. வாஷிங்டனிலுள்ள அரபுநாடுகளின் தூதர்கள் ஓர் ஆட்சேபக் குறிப்பை கூட்டாக அமெரிக்க அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளனர்.

கெய்ரோவில் எகிப்தியப் பத்திரிகை 'அல் அஹ்ரம்' இந்தத் தகவலைத் தெரிவித்திருக்கின்றது

அரபுநாடுகள் தெரிவித்த எதிர்ப்புகளுக்கு அமெரிக்க ராஜாங்க இலாகா தெரிவித்துள்ள பதிலில் சோவியத் யூனியன் அரபுநாடுகளுக்கு ஆயுதங்கள் வழங்கி வருவது நீடிக்கும்வரை அமெரிக்காவும் இஸ்ரேலுக்கு ஆயுதம் விநியோகித்துவரும் என்று தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது

அமெரிக்காவின் இந்தப் போக்கு இஸ்ரேலின் முறை தவறிய செயல்களுக்கு ஊக்கமளிப்பதாகக் கருதப்படுகின்றது

மேற்காசியாவி அமைதியை விரும்புவதாக அமெரிக்கா கூறுவதில் அர்த்தமில்லையென்று அரபு அதிகாரிகள் சுட்டிக்காட்டுகிருர்கள்

# கலால்ஊழியர் மீதான வழக்கில் எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், திங்கள்

ஊர்காவற்றுறை கலால் பகுதி உத்தியோகத்தர் மூவர் மீது தொடரப்பட்ட வழக்கில் ஊர்காவற்றுறை மாஜிஸ்திரேட் ஜனுப் எம். ஜாமீல் எதிரிகள் மூவரையும் விடுதலைசெய்தார்

இவ்வழக்கில் 1968-ம் ஆண்டு டிசம்பர் 11-ம் தேதி கலால் பகுதியைச் சேர்ந்த கந்தையா சதாசிவம், எம் எல் பெர்னண்டோ, எம் எஸ் தாசன் ஆகியோர் நயினுதீவைச் சேர்ந்த ஆர் சண்முகநாதன், தனபாலசிங்கம் ஆகியோரை தாக்கியதாகவும் காயப்படுத்தியதாகவும் 5 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன

1-ம், 2ம் எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் ஆர். விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜரானுர். 3-ம் எதிரி சார்பில் அட்வகேட் ஏ. அமிர்தலிங்கம் புறக்டர் ஆர். விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜரானுர்

வழக்காளி சார்பில் வழக்குவிசாரணையை தொடரவில்லையென தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாஜிஸ்திரேட் எதிரிகளை விடுதலைசெய்தார்.

# சோவியத் திரைப்படவிழா

## இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லூர் வீரமாகாளி அம்மன் மேற்கு வீதியில் இன்று மாலை 7 மணிக்கு சோவியத் திரைப்படவிழா ஆரம்பமாகிறது விழாவில் இன்று காட்டப்படும்படங்கள் வருமாறு:-

- பசுமைபூத்த நட்புறவு விருட்சம் (இலங்கைக்காட்சிகள்)
- வாழும் லெனின்
- நமது காலத்து லெனின்

இவை மூன்றும் தமிழ் படங்களாகும் தொடர்ந்து 12-ம் திகதிவரை திரைப்பட விழாநடைபெறும் நல்லூர் ஐக்கிய கலாசாலையில் புகைப்படக் கண்காட்சியும் நடைபெறுகிறது. (தே. நி)

## புதிய உபவேந்தர்

கோட்டை, திங்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் புதிய உபவேந்தராக பேராசிரியர் திரு வி ஏ அபயவிக்கிரம நியமிக்கப்பட்டுள்ளார், கல்வி மந்திரி நேற்று மாலை இதனை அறிவித்தார்.

திரு. அபயவிக்கிரம தற்போது பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தாவரவியல் பேராசிரியராகப் பணியாற்றுகிருர். இவருக்கு வயது 47.

ளது என்று கூறினர்.

வடபகுதி அசைஸ் விசாரணை

# நாவற்குழி கொலை வழக்கில் எதிரிகளுக்கு 3 வருட கடூழியம்

## ரூ. 500 அபராதம்

யாழ்ப்பாணம், திங்கள்

நாவற்குழி கொலைவழக்கில் இரு எதிரிகளுக்கும் தலா 3 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது அபராதம் கட்டத்தவறினுல் மேலும் 6 மாத கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது

அபராதம் கட்டினுல் அதனை இறந்தவரான வயிரமுத்துவின் பிள்ளைக்குக் கொடுக்குமாறு நீதியரசர் உத்தரவிட்டார்

ஜூரிசபையினர் சுமார் அரைமணி நேரம் மந்திராலோசனை செய்தபின்னர் எதிரிகள் இருவரும் சாதாரண காயம் விளைவித்த குற்றங்களுக்கு குற்றவாளிகளென ஏகமனதாக தெரிவித்தனர்

இவ்வழக்கில் நாவற்குழியில் 68-ம் ஆண்டு ஜூலை 7ம் தேதி நன்னி பூபாலசிங்கம், நன்னி தம்பிமுத்து ஆகியோர் சின்னர் வைரமுத்து என்பவரை கொலை செய்ததாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

1-ம் எதிரிசார்பில் அட்வகேட் ஜே. ஏ. பி. செரிபிம் புறக்டர் வி. செல்லத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜரானுர். 2-ம் எதிரிசார்பி அட்வகேட் ரி. வி. ராஜரத்தினம் அட்வகேட் எஸ். தேவசகாயத்தின உதவியுடனும், புறக்டர் பி. மயில்வாகனத்தின் அனுசரணையுடனும் ஆஜரானுர் எதிரிகளுக்காக அரசாங்கத்தால் புறக்டர் கே. உலகநாதன் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் பிரியாந்த பெரேரா ஆஜரானுர்.

வடபகுதி அசைஸ்நீதியரசர் திரு. ஓ. எல். டி. கிறெஸ்சர் தீர்ப்பளிக்கையில் கூறியதாவது:-

ஜூரிமார்ாளின்தீர்ப்பிலிருந்து வயிரமுத்துவுக்கு காயம் விளைவித்தீர்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. உங்களில் எவர் கடும்காயம் விளைவித்தீர்கள் என்பதைக் காணமுடியாமலிருக்கிறது என்பதையும் ஜூரிமார்களது தீர்ப்புமேலும் தெரியப்படுத்துகிறது. நீங்கள் இருவரும் அவருக்கு காயம் விளைவித்தீர்கள் எந்தக் காயத்தை எவர் விளைவித்தீர்கள் என்பது தெரியாமலிருக்கிறது. ஆயுதம் வைத்திராத ஒருவரை இருவரும் கொடுமையாகத் தாக்கியிருக்கிறீர்கள். காயப்பட்ட மனிதருக்கு 36 காயங்கள் விளைவித்திருக்கிறீர்கள். கடைசியாக அவர் விழும் வரை காயம் விளைவித்திருக்கிறீர்கள் ஜூரிமார்களினுல் காணப்பட்ட தீர்ப்புக்கு ஆகக் கூடிய தண்டனைவிதிக்கிறேன்

அசைஸ் விசாரணை மீண்டும் 12-ம் திகதி காலை ஆரம்பமாகும்

## 'கால்களைக் கண்டேன் தலைகளைக்காணவில்லை"

சம்பவம் நடந்ததினம் காலை 10 மணியளவில் வைரமுத்து என்னைக் கூப்பிட்டார். நான் அந்தப் பக்கம் பார்த்தேன். அவர் விழுந்து கொண்டிருந்தார். நான் வெளியில் செல்லும் போது இருவர் ஓடினுர்கள் அவர்களின் முகத்தைக் காணவில்லை. வேலி மறைத்துவிட்டது. கால்களைத் தான் கண்டேன். சம்பவம் நடந்த இடத்துக்குப் போனேன். அவரைப் பார்த்துவிட்டு ஐயோ என்று கத்தினேன் படலையடியில் நிற்க ஆட்கள் வந்தார்கள். சீனிவாசகத்தை தெரியும். அவர் வந்ததை காணவில்லை. 2 பெண்கள் வந்து நின்ருர்கள்.

நாவற்குழி கொலைவழக்கில் சாட்சியமளித்த மருதர் ஞானமுத்து மேற்கண்டவாறு கூறினுர்.

மருதர் ஞானமுத்து சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: எதிரிகள் இருவரையும் எனக்குத் தெரியும், இவர்கள் குடியிருப்பது எனது வீட்டிற்கு அருகாமையில் சம்பவம் நடந்ததினம் நான் வீட்டிலிருந்தேன். என்மனைவியும் வீட்டிலிருந்தார். என்னை கூப்பிட்ட சத்தம் கேட்டது, வைரமுத்து என்னைக் கூப்பிட்டார்.

நான் சம்பவ இடத்திற்கு சென்றபின் வீட்டிற்கு வந்து படுத்து விட்டேன். எனக்கு தலையிடி காய்ச்சல் இருந்தது. விதானையார் வந்து என்னை எழுப்பினுர். அவர் என்னைக் கூட்டிக்கொண்டு போனுர். அந்த நேரம் பொலிஸார் வந்து விட்டார்கள். அவர்களுக்கு வாக்குமூலமளித்தேன்.

சீனிவாசகம் எதிரியின் வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது கூறியதாவது:

சீவல் தொழிலுக்கு நான் பாவிப்பது மேசைக் கத்தி, 3 வருடமாக நான் சீவல் செய்து வருகிறேன். 3 வருடமும் சீவலுக்கு நான் மேசைக் கத்தியே பாவித்து வந்தேன். மற்றச் சீவல் காரர்கள் வேறு கத்திபாவிப்பதை கண்டிருக்கிறேன் எதிரிகள் சொந்தக்காரர்கள் அவர்களுடன் கதைப்பதில்லை, 2-ம் எதிரி புகையிரத நிலையத்தில் வேலை பார்த்து வந்தார். எதிரிகள் இருவரும் நன்னியனின் புத்திரர்கள் மற்றொரு மகன் இறந்து விட்டார்.

அன்று எதிரிகள் வீட்டடியால் போனேன். எதிரிகள் வீட்டில் இருந்ததைக் காணவில்லை. இராசையாவுடன் சம்பவம் நடந்த இடத்திற்கு போனேன். மாமன் வயிரமுத்து இறந்து கிடந்தார். சடலத்திற்கு கிட்ட எவரும் இல்லை. இராசையா அங்கு இருந்தார். நான் பொலிஸ் நிலையத்திற்குப் போனேன். திரும்பவும் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தேன் ஞானமுத்துவைக் கண்டேன். அவரை நான் ஒன்றும் கேட்கவில்லை, சம்பவத்தை எவ்வளவு தூரத்தில் நின்று பார்த்ததாக நான் செல்லத்துரையை கேட்கவில்லை. அவர் தானுகவும் சொல்லவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### திருமண அழைப்பு

**துரைசிங்கம் - மனோன்மணி**

பண்ணாகம் தெற்கைச் சேர்ந்தவரும் இ. போ. ச. புத்தளம் டிப்போவில் காப்பாளராகக் கடமையாற்றும் திரு. வ. துரைசிங்கம் அவர்களுக்கும், அருணசலம்மகள் மனோன்மணிக்கும் (8-9-69) இன்று விசவர்த்தனை முருகமூர்த்தி கோவிலில் காலை 9 மணிக்கு திருமணம் நடைபெறும். உறவினர்கள் நண்பர்கள் இதை அழைப்பாக ஏற்கவும். வ. துரைசிங்கம். 1384

### திருமண அழைப்பு

திரு சி. சிவபாதசுந்தரம் (உள்ளூர் ஆட்சி அமைச்சு கொழும்பு) அவர்களுக்கும் அகிலேஸ்வரி தம்பு அவர்களுக்கும் 8-9-69ம் திகதி திங்கட்கிழமை, காலை 9 மணிக்கும் 11 மணிக்கும் இடையில்வரும் சுபமுகூர்த்தத்தில் இந்து சமய முறைப்படி வரணி சிறீ சீவப்பிட்டி கந்தசாமி கோவிலில் திருமணம்நடைபெறும். தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பவில்லை. சி. சிவபாதசுந்தரம், இடைக்குறிச்சி வரணி. 1383

### விற்பனைக்கு

இயக்கச்சியில் 2 வயது முதல் 7 வயது வரையுள்ள தென்னை 45 ஏக்கரும் வயல் 5 ஏக்கரும் பஸ் பாதை நேரிலோ கடித மூலமோ தொடர்புகொள்க. 68 5, புல்லாந்தி தோட்ட ஒழுங்கை, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம். 1385

### தேவை

யாழ்ப்பாண பட்டினத்தில் ஓர் டாக்டரின் வைத்தியசாலையில் வேலைபார்க்க ஆட்கள் தேவை. பிணைப் பணம் கட்டக்கூடிய இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல. 1386 Co 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1386

### தேவை

1. கோண்டாவில் சாயத் தொழிற்சாலைக்கு (பீஸ்) றேற்றுக்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் தேவை.
(அ) வயது 18 — 30 க்குள் இருத்தல்வேண்டும்.
(ஆ) நெசவு அனுபவமும் சாயமிடும்தொழில் அனுபவமும் வாய்ந்தவராயிருத்தல் விரும்பத்தக்கது.
2. காவலாளி
வயது: 25 — 45 வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
3. மின்தறிபிற்றர்
(அ) வயது18 — 30 க்குள் இருத்தல் வேண்டும்.
(ஆ) எஸ். எஸ் சி அல்லது ஜீ சீ. ஈ (சாதாரண) சித்தியடைந்தவராய் இருத்தல்வேண்டும்.
(இ) இதில் உயர்தர கணிதம், பௌதீகவியல் பாடங்களில் விசேட சித்தியிருத்தல் விரும்பத்தககது
(ஈ) யந்திரத் தொழில் நுட்பம் வாய்ந்தவராயிருத்தல் விரும்பத்தக்கது.
(உ) சமாஜ ஊழியர்களுக்கு மேற்கூறிய கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்

விண்ணப்பங்கள் 24-9-69 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவையான விபரங்களை இச்சமாசத்திலிருந்து அறிந்துகொள்ளலாம்.

கௌரவ காரியதரிசி
யாழ்ப்பணம் ஐக்கிய நெசவு சங்கங்களின் சமாசம்.
10/1 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1736

சுழிபுரம், ஞாயிறு

சமீப நாட்களாக சங்கானை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இருபொலிஸ் உத்தியோகத்தர்கள் பண்டத்தரிப்பிற்கு வந்து கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கு ஒழுங்கு செய்த சங்கானை புதிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை பண்டத்தரிப்பு கார்திசேவா மன்றத்தினர் பாராட்டி தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்,

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
சிவாஜி — ஜெயலலிதா
சௌகார் ஜானகி
நடித்த
எங்க ஊர் ராஜா
65-வது தினம்

வடமராட்சியில்

# ரூ. 1 லட்சம் செலவில் அனாதைபிள்ளைகளுக்கு ஆச்சிரமம்

உடுப்பிட்டி, ஞாயிறு

'சுமார் ஒரு இலட்சம் ரூபா செலவில் வடமராட்சியில் அனாதைப் பிள்ளைகள் ஆச்சிரமம் உருவாகும் இந்த ஆச்சிரமத்தில் அனாதைப் பிள்ளைகளுக்குத் தொழில் கல்வி, சலாச்சாரம், விவசாயம் ஆகியவை போதிக்கப்படும். வல்லிபுரக் கோவிலடியில் அனாதைப் பிள்ளைகள் ஆச்சிரமம் நிறுவ 5பரப்புக்காணி நன்கொடையாக வழங்க முதலியார் திரு க. சுப்பிரமணியம் சம்மதித்துள்ளார். ஸ்ரீ சாரதா நிலைய சேவாச்சிரம பரிபாலனத்தில் வட மாகாணத்தில் நிறுவப்படஇருக்கும் ஒரே ஒரு அனாதைப் பிள்ளைகள் ஆச்சிரமம் இதுவேயாகும்'

இத்தகவலை பருத்தித்துறை ஸ்ரீ சாரதா நிலைய சேவாச்சிரமப் பொதுச்செயலாளர் திரு இரத்தினசபாபதி நமது நிருபரிடம் தெரிவித்தார். கல்கத்தா ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஸ்ரீமத் வீரேஸ்வரானந்தாவிடம் தீட்சை பெற்ற இளைஞரான திரு இரத்தினசபாபதி ஆச்சிரம வாழ்க்கையைமேற்கொண்டு வருகின்றார்

அவர் மேலும் கூறியதாவது:

இலங்கை சமயத்துறையில துரித வளர்ச்சியடைந்துள்ளது சினிமாவிற்கும் சமயத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை, சினிமா ஒரு கலை. மத வளர்ச்சிக்கு சினிமா தடை எனக்கூறமுடியாது. ஒவ்வொருவருடைய மனதைப் பொறுத்ததே சினிமாவும் மதமும்.

இலங்கையில் மத நூல்கள்போதாது இந்துசமயத்தின் புராதன நூல்கள் பல இலங்கையில் கிடையாது இந் நூல்களை இந்தியாவிலிருந்து வருவிக்க வேண்டும் ஆறுமுகநாவலரின் நூல்களில் முக்கியமானவைகூட இன்று எம்மிடமில்லை. இந்து மாமன்றம் முதலியவைகள் மூலம்தான் சைவ நூல்களை எங்கிருந்தாலும் வரவழைத்துப் பற்றாக்குறையை நீக்க முடியும்.

சுவாமி விவேகானந்தரின் போதனைகள் எந்தச் சமயத்தவருக்கும், எக்காலத்துக்கும், சகல மக்களுக்கும் பொதுவானதுவிவேகானந்தரின் இலட்சியம், வாழ்க்கைத் தத்துவம் சமூகக் குறைபாடுகளுக்கு மருந்தாக விளங்குகின்றன. தமிழினத்தின் இன்றைய நெருக்கடிகள் நீங்க விவேகானந்தரின் போதனைகள் அவசியம்

ஸ்ரீ இராமகிருஷ்ணரின் கொள்கை எல்லாமக்களுக்கும் ஒரே மாதிரியானது மக்களின் மனம் மாறுவதின் மூலம் தான் தீண்டாமையை ஒழிக்கமுடியும். நடவடிக்கைகளால் எவ்வித பயனும் இல்லை சட்டத்தை இயற்றினாலும் மக்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதனால் பிரயோசனம்இல்லை. மக்கள் மனம் பண்பட்டாலே பிரச்னைகளுக்கு விடிவுகாணமுடியும். சமயத்தைஎப்பொழுது அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருகின்றோமோ அப்பொழுதே மனமும் பண்படையும்

### தலைமை ஸ்தாபனம் வேண்டும்

இந்து சமயத்தவர்களுக்கென ஒரே தலைமை ஸ்தாபனம் இல்லாததே மதமாற்றம். மதப்பூசல்கள் அதிகரித்துவருவதற்குக் காரணமாகும் மத உறுப்பினர்கள் சமய அடிப்படையாக வாழ்வதில்லை ஆனால் சமயத்திற்காகப் பாடுபடுகின்றனர். ஒரே இயக்கம் இருந்தால் உலக சைவர்கள் அனைவரும் ஒன்றுபட்டுமதச்சட்டங்களை அனுசரித்துநடப்பர் இதற்கு மதவாதிகளின் உன்னதமான வாழ்க்கை பிறருக்கு வழிகாட்டியாக விளங்கும்

அனாதைப்பிள்ளைகள் ஆச்சிரமம் நிறுவுவதற்கும் பெரியார்களின் பணவுதவியே முக்கியம் என்றும் பொருளுதவிபுரியவிரும்புவோர் திரு. இரத்தினசபாபதி, பொதுச் செயலாளர், ஸ்ரீ சாரதா நிலைய சேவாச்சிரமம், பருத்தித்துறை என்னும்முகவரியில் தொடர்புகொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்

### சகல போட்டிகளிலும் வீனஸ் வென்றது

புத்தூர், ஞாயிறு

புத்தூர் வீனஸ் கழகம் மேற்கொண்ட விளையாட்டுச் சுற்றுலாவின் போது நடைபெற்ற கரபந்தாட்ட, உதைபந்தாட்டப் போட்டிகளில் சகல போட்டிகளிலும் வீனஸ் கழகம் வெற்றியீட்டியது.

போட்டி விபரம் வருமாறு:

வீனஸ் கழகத்திற்கும் வட்டுவாகல் இளங்கதிர் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் வீனஸ் 9-15, 15-13, 15-9 புள்ளிகளால் வெற்றியீட்டியது. முல்லைத்தீவு [illegible] கழகத்தை வீனஸ் 15-9, 15-13 புள்ளிகளால் வெற்றிகொண்டது.

### "காலம் தாழ்த்தாமல் ஆசிரிய சேவைக் கமிஷன் நியமிக்குக"

உரும்பராய், ஞாயிறு

"இந்த நாட்டின் கல்விக் கொள்கை ஒரே சீரில் அமையவில்லை. கல்விநிலை சீர்பெற கல்விமான்களதும், கல்வி புகட்டுவதில் நல்ல அனுபவம் பெற்ற ஆசிரியர்களதும் யோசனைகளை அரசாங்கம் பெறவேண்டும் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர்களின் வாழ்க்கை வளர்ச்சியும் இன்றியமையாதது. ஆசிரியனை அரசாங்கம் தக்கபடி கவனித்தால்தான் ஆசிரியனும் தனது கடமைகளை மனப்பூர்வமாக செய்ய முடியும் ஆசிரியன் மனநிறைவுடன் கல்வித்தொண்டில் ஈடுபடும்போது தான் சம்பந்தப்பட்ட மாணவர்களும் போதிய பயனைப் பெறமுடியும். எனவே ஆசிரியர் குறைகளை ஆராய்ந்து நிவிர்த்திசெய்யுமுகமாக அனுபவம்வாய்ந்த ஆசிரியர்கள் உட்படக் கல்விமான்களைக்கொண்ட ஓர் ஆசிரிய சேவைக் கமிஷனை நியமிக்க வித்தியாபகுதி காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்கவேண்டியது இன்றியமையாதது' என வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் பண்டிதர் ச. பொன்னுத்துரை வெளி

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**திங்கள் 8—9—69**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00,

### ஒலிபரப்பு பகுதியினர் நடத்தும் விவசாய போட்டி

அளவெட்டி, ஞாயிறு

அகில இலங்கை தமிழ் ஒலிபரப்புப் பகுதியினர் 69-70 ஆண்டு விவசாயப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

வருடாவருடம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம் விவசாயப் பகுதியினரின் ஆதரவுடன் நடாத்திவரும் வானொலி விவசாய அறிவுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் 20-9-69ம் திகதிவரையும்ஏற்றுக்கொள்ளப்படவிருக்கின்றன.

அடுத்தவருடம் நிகழும் இப்போட்டியில் சென்ற போட்டியில் கலந்து கொண்ட 6 மாவட்டங்களிலும் பார்க்க 16 மாவட்டங்கள் இம்முறை கூடுதலாகப் பங்குபற்றவிருக்கின்றன.

இந்தப் போட்டிகளுக்கான ஏற்பாடுகளை கமத்தொழில் பிரசாரப்பகுதி அதிபர் திரு டெரிக் செக்மர் செய்து வருகிறார்

ஒவ்வொரு மாவட்டத்திலும் இறுதிப் போட்டிகள் 21-10-69 ம் திகதி முடிந்ததும் வானொலி கூட்டுஸ்தாபனத்தால் நிகழ்ச்சிகள் ஒலிப்பதிவு செய்யப்படும்

இப்போட்டியில் இம்முறை ஏராளமான விவசாயிகளையும் முதிய விவசாயிகளையும் பாடசாலை மாணவ மாணவிகளையும் ஈடுபடச் செய்ய வேண்டுமென யாழ் மாவட்ட விவசாய அதிகாரி திரு. பொ. மாணிக்கவாசகர் விவசாயப் போதனாசிரியர்களை சுற்று நிருபம் மூலம் கேட்டுள்ளார்.

### வடமாகாண ஆசிரியர் சங்கம் ஆட்சேப ஊர்வலம்நடத்தும்

யாழ்ப்பாணம், திங்கள்

தேசிய ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு இ. சிவநேசனும், துணைத்தலைவர் திரு. ஜே சந்தியாபிள்ளையும் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டதைக் கண்டித்து வடமாகாண ஆசிரியர் சங்கம் இம்மாதம் 16-ம் திகதி ஆட்சேபஊர்வலம் ஒன்றையும் பொதுக்கூட்டத்தையும் நடாத்தவிருக்கின்றது

கல்வி அமைச்சின் நியாய மற்ற நடவடிக்கைகளினால் தொழிற்சங்க உத்தியோகஸ்தர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். என்றும் இதனைக் கண்டிக்கும் முகமான கூட்டம் 16-ம் திகதி மாலை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடக்கவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆசிரிய சங்க பொதுச் செயலாளர் திரு. இ. சிவநேசன் 13 நாள் அறிவித்தலில் நுவரெலியாவிலுள்ள லிண்டுவாவுக்கும், துணைத் தலைவரான 54 வயதுள்ள ஜே சந்தியாபிள்ளை சடுதியாகத் தந்தி மூலம் இடமாற்றம் செய்யப்பட்டதையும் கண்டித்தே இவ் ஊர்வலமும். கூட்டமும் நடைபெறவிருக்கின்றது.

இது சம்பந்தமாக வடமாகாண ஆசிரிய சங்கச் செயலாளர் திரு ச சபாநடேசன் விடுத்திருக்கும் துண்டுப் பிரசுரமொன்றில் தெரிவித்துள்ளதாவது:

இடமாற்றம் செய்யப்பட்டுள்ள இரண்டு ஆசிரியர்களும் அரசாங்கத்தின் கொள்கை எதையும் மீறவில்லை என நாம் கருதுகின்றோம். கல்வி நூற்றாண்டு அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களை வற்புறுத்தி விற்பதையோ வாங்குவதையோ ஆசிரியர்கள் ஆதரிக்க வேண்டாமென ஆசிரியர் சங்கங்கள் கூட்டாக எடுத்த தீர்மானத்திற்கிணங்க மற்றைய ஆசிரிய சங்கங்களுடன் சேர்ந்து துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டது அரசாங்க கொள்கையை மீறுவதா?

ஆசிரியர்கள் மாற்றம் செய்யப்பட்ட முறையினை ஆட்சேபிப்பதோடு. இம் மாற்றங்கள் உடனே ரத்துச் பெய்யப்படல் வேண்டும் அல்லது இதற்குப் பாரபட்சமற்ற விசாரணை நடத்தப் படவேண்டும் எனவும் இவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கா நி,

### பெண்ணின் கழுத்தை நெரித்து தோட்டைப் பறித்தாராம்

மல்லாகம், ஞாயிறு

ஊரங்குணையைச் சேர்ந்த எஸ் இராசம்மா என்பவ

### இ. மு. சங்க நிர்வாகிகள்

### விளையாட்டுப் பொருட்காட்சி

பருத்தித்துறை, ஞாயிறு

இம்மாதம் 27ந் திகதி யாழ்ப்பாண விளையாட்டரங்கில் விளையாட்டு அமைச்சினால் ஒழுங்குசெய்யப்பட்டு நடக்கவிருக்கும் விளையாட்டுப் பொருட்காட்சியில் பருத்தித்துறை, உடுப்பிட்டித் தொகுதிகளிலுள்ள பல பாடசாலைகள் கலந்துகொள்வதற்கான ஒழுங்குகளை பருத்தித்துறை உடல்நலப் போதனாசிரியர் திரு. எஸ். கதிர்காமத்தம்பியும், உடுப்பிட்டி உடல்நலப் போதனாசிரியர் திரு. கே கார்த்திகேசுவும் மேற்கொண்டுள்ளனர்.

### உடுப்பிட்டியில் சோவியத்படங்கள்

பருத்தித்துறை, ஞாயிறு

இலங்கை-சோவியத் நட்புறவுச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை கடந்த சில நாட்களாக உடுப்பிட்டித் தொகுதியில் பல இடங்களிலும் லூனா, ஸ்புட்னிக் விண்வெளி யாத்திரையைச் சித்தரிக்கும் திரைப்படங்களைக் காட்டிவருகின்றது. இம்மாத நடுப்பகுதியில் இவர்கள் பருத்தித்துறைத் தொகுதியிலும் இவற்றைக் காட்டவிருப்பதாகத் தெரிகிறது. ......

### வள்ளுவர் விழா

சுழிபுரம், ஞாயிறு

மாதகலில் அமைக்கப் பெற்ற அண்ணா அரங்கில் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டு நிறைவு விழா நாளை சிறப்பாக நடைபெறவிருக்கின்றது

திருகோணமலை நகராண்மைக் கழக அங்கத்தவர் திரு வீரசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். விழாவுக்கு தமிழ்நாடு சட்டசபை சபாநாயகர் புலவர் கா கோவிந்தன் பிரதம பேச்சாளராக கலந்துகொள்கிறார்.

### வேண்டுகோள்

அளவெட்டி, ஞாயிறு

தெல்லிப்பழையில் உள்ள பிரபல வைத்தியசாலை ஒன்றான தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலைக்கு முன் உள்ள பஸ் தரிப்பு நிலயத்தில் கடுகதி பஸ்ஸை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு தெல்லிப்பழை தமிழரசுக் கிளை திரு. எஸ் ஜே வி செல்வநாயகத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்க ஊர் ராஜா

65-வது தினம்

ராஜா

(யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி நடித்த

விஜயா & சுரேஷ் கம்பைன்ஸ்

## குழந்தைக்காக

கதை-வசனம் துறையூர் மூர்த்தி பாடல்கள் கவிஞர் கண்ணதாசன்

குழந்தைக்காக நீங்கள் வாங்கும் அரை டிக்கட்டுகளை கவனமாக வைத்திருங்கள். பலபரிசுகள் காத்திருக்கின்றன உங்கள் குழந்தைக்காக!

## யாழ் வின்ஸர்

தினசரி 4 காட்சிகள்

ஏ. வி. எம் ராஜன், புஷ்பலதா, நடித்த

## பால்குடம்

## யாழ்நகர் வெலிங்டன்

தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு

போயா முன்தினம், போயா தினங்களில்

காலை 10-30 மணிக்கு மெட்னி

மற்றும் சில சினிமாஸ் தினங்களில்



ரங்கராவ் ★ அஞ்சலிதேவி

பாலையா ★ பேபி ரோஜாரமணி

எல். விஜயலக்ஷ்மி ★ ஏ. கருணாநிதி

பாலமுரளி கிருஷ்ண ★ கீதாஞ்சலி

வாணிஸ்ரீ ★ ஜெயந்தி ★ நிர்மலா

மற்றும் பலர் நடித்த

ஏ. வி. எம். அளிக்கும்

## பக்த பிரகலாதா

(ஈஸ்ட்மென் கலர்)


## கூட்டுத்தாபனம்

திங்கள் 8—9—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன்ட் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 49 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர் கேட்டவை, 1-00 திரை கானம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 நாளைய சந்ததி 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 வீணை, 6-30 கிராம சஞ்சிகை, 7-00செய்திச்சுருக்கம், 7 03 கர்நாடகஇசை, 7-35 முத்தி நெறி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கர்நாடக இசை, 10-30 செய்திச்சுருக்கம்.


## வெஸ்லி சினிமா

மானிப்பாய்

தினசரி 6-30. இரவு 10-00

ப்ரீபோயா, போயா 2-30மணி

சிவாஜி-கே ஆர். விஜயா நடித்த

## ஊட்டி வரை உறவு

(ஈஸ்ட்மென் கலர்)

வல்வெட்டித்துறை

## ரஞ்சனு தியேட்டர்

தினசரி 6-30, 9-30.

ப்ரீபோயா, போயா காலை 10-30

ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா நடித்த

## முகூர்த்த நாள்

## MANOHARA

JAFFNA

Daily 4-45, 7, & 9-45p.m

Poyadays 10-00 A,M.

Dean Martin Robert Mitchum

in

" 5 CARD STUD "

(Techni Color)

## REGAL JAFFNA

Daily 4-45, 7-00 & 9-45p.m

Fred Bear & Sylvia Solar

in

M. M. M. 83

(Eastman Color)


போட்டியில் வீனஸ் 9-15, 15-13, 15-9 புள்ளிகளால் வெற்றியீட்டியது. முல்லைத்தீவு கலைவாணி கழகத்தை வீனஸ் 15-9, 15-13 புள்ளிகளால் வெற்றிகொண்டது. [முள்]ளியவளை, தண்ணீரூற்றுப் பகுதித் தெரிவுக் கோஷ்டிக்கும், வீனஸ் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் வீனஸ் 2 கோல்களைப் பெற்று வெற்றியீட்டியது. முள்ளியவளை, தண்ணீரூற்று, முல்லைத்தீவு தெரிவுக்கோஷ்டிக்கும் வீனஸ் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் கடுமையான போட்டியின் பின் வீனஸ் 3 கோல்களைப் போட்டு வெற்றியீட்டியது.

...தாழ்த்தார் நடவடிக்கை எடுக்கவேண்டியது இன்றியமையாதது'' என வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் பண்டிதர் ச பொன்னுத்துரை வெளியிட்டுள்ள ஓர் அ[றிக்]கையில் குறிப்பிட்டுள்ளார்.

## ரேடியோ அஞ்சல்

மல்லாகம், ஞாயிறு

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் ரதோற்சவத்தை இம்மாதம் 10-ம் திகதி காலை 7-40 மணிமுதல் 10-30மணி வரையும், தீர்த்தவிழாவை 11-ம்திகதி மாலை 4-30 மணி முதல் 6 00 மணிவரையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம் அஞ்சல் செய்யும்.

# இன்றைய பலன்

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

ஆவணி மாதம் 23-ந் திகதி (8-9-69)

**மேஷம்**- கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். தொழில் துறையில் புதிய மாற்றங்களுக்கு இடமுண்டு. சகதொழிலாளர்களின் ஒத்துழைப்பு அவசியம் கிடைக்கும். தெய்வத்தின் துணையும் உண்டு

**ரிஷபம்**- எதிர்பாராதவகையில் தனவரவுக்கு இடமுண்டு. வெளியூரிலிருந்து மகிழ்ச்சிகரமான தகவல் கிடைக்கக்கூடும். மனதில் புதுமையான எண்ணங்கள் உருவாகும். வரவேற்கவேண்டிய நாள்.

**மிதுனம்**- பலவழிகளிலும் பணம் செலவாகும். எதிலும் தயக்கநிலை தென்படும். வணிகர்களுக்கு வியாபாரத் துறையில் சிறிய பாதிப்பு ஏற்படும். புதிய முயற்சிகளை ஒத்திவைத்தல் விரும்பத்தக்கது.

**கடகம்**- ஆசை அலைகள் சீறியெழும் எதிலும் அவசரப்படுவீர்கள். முற்கோபம் உங்களை [ஆ]பத்தில் சிக்க வைக்கலாம். குடும்ப விவகாரத்தில் மிகவும் நிதானத்துடன் நடந்துகொள்ளவும்.

**சிம்மம்**- நிதியில் அபிவிருத்தி தென்படும். நீண்ட நாள் அபிலாஷை இன்று நிறைவேறலாம். பேச்சு வன்மையின் மூலம் பெரும் [தொ]கைச் சம்பாதிப்பீர்கள்' குடும்பத்திலும் சுமுகமான நிலை உருவாகும்.

**கன்னி**-எண்ணியதில் தடைகள் தோன்றும். இனத்தவர்கள் மத்தியில் கசப்புமனப்பான்மை உருவாகும். சகோதரவழியால் சஞ்சலத்துக்கும் இடமுண்டு. மிகவும் அடக்கத்துடன் நடந்துகொள்ளவும்

**துலாம்**- மாதுருவழியால் மகிழ்ச்சிகரமான செய்தி கிடைக்கும். ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள் வெளியிடத்துத் தொடர்புகளிலும் முன்னேற்றமுண்டு சிந்தனையாளர்களுக்கு நன்று

**விருச்சிகம்**- தாம்பத்திய வாழ்வில் வசந்தம் நிலவும். புத்திரவழியால் புகழுக்கு இடமுண்டு சிலர் வாழ்க்கையில் யாத்திரைப் பிரியமும் ஏற்படலாம். எவ்வழி நல்வழி, அவ்வழி நடப்பீர்கள். நல்லநாள்.

**தனுசு**- துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடர்ந்து வரும். உடன் பிறந்தவர்கள் மத்தியிலேயே மோதல்கள் தோன்றக்கூடும். எதிர்பாராத திருப்பங்கள் உங்களைத் திகைக்கவைக்கும். அவதானம்வேண்டும்.

**மகரம்**- வாழ்க்கை இன்று மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். உறவினர்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள். பிரமச்சாரிகள் வாழ்க்கையில் காதல் சலசலக்கும். எங்கும் வரவேற்புக்கும் இடமுண்டு.

**கும்பம்**- நண்பர் ஒருவர் உங்கள் காலை வாரிவிடுவதற்கு முனையக்கூடும். தொழில்புரியும் இடத்தில் மேலதிகாரியின் கண்டிப்புக்கு இலக்காகலாம். சிந்தையில் குழப்பநிலை தென்படும், பொறுமை நன்று.

**மீனம்**- வாழ்வுப்பயணத்தில் வளமான திருப்பத்துக்கும் இடமுண்டு, சுற்றுவட்டாரத்தில் செல்வாக்கு உயரும், பெரியோர்களின் ஆதரவு உங்கள் பக்கம் இருக்கும், புதிய சாதனையை நிலைநாட்டுவீர்கள்,

## ...தோட்டைப் பறித்தாராம்

மல்லாகம், ஞாயிறு

ஊரங்குணையைச் சேர்ந்த எஸ் இராசம்மா என்பவரிடம் இவ் வருடம் ஆடி மாதம் 8ம் திகதி 80 ரூபா ரொக்கமும், தங்கத்தோடுகளும் களவாடியதாக சுன்னாகம் பொலிஸாரால் குப்பிளான் வாசியான எஸ். அருணாசலம் என்ற நபர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ள வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

அடைவு கடையில் நகையுடனும், பணத்துடனும் சம்பவ தினம் வீடுநோக்கிவந்து கொண்டிருந்ததாகவும், வழியில் சந்தித்தஎதிரி தம்மைத் தாயார் வீட்டுக்கு அழைத்துச் சென்று அங்கே சாராயம் பருகுமாறு கேட்கவே தாம் மறுத்ததாகவும், எதிரி சாராயம் குடித்ததாகவும், பின்னர் காரில் தம்மை வீட்டுக்கு அழைத்து செல்வதாக கூறி வழியில் வைத்து கழுத்தை நெரித்து பணத்தையும், தங்கத்தோடுகளையும் பறித்துக் கொண்டு ஓடி விட்டதாகவும் இராசம்மா தமது சாட்சியத்தில் தெரிவித்தா[ர்]

மேல் விசாரணை இம்மாதம் 27ம் திகதிக்கு ஒத்தி வைக்கப் பட்டது.

## வேலைகள் பூர்த்தியாகிறது

காலி, ஞாயிறு

அடுத்த இரு மாதங்களில் காலித் துறைமுக நிர்மாண வேலைகள் பூர்த்தியாகலாம் எனஎதிர்பார்க்கப்படுகிறது 1,400 அடி நீளமான இறங்கு துறைமுகமொன்றும் நிறுவப்படவிருக்கிறது.

[இ]த் துறைமுக நிர்மாண வேலைகளுக்கு இரண்டரைக் கோடி ரூபா செலவாகும் எனக் கணிக்கப்பட்டுள்ளது இரண்டுக்கும் மேற்பட்ட அணைக்கட்டுகள் கட்டப்படவிருப்பதால் மேலும் அதிக பணம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மாறிய பெயர்

யாழ்ப்பாணம், திங்கள்

'குறை தீர்ந்தது' என்ற தலைப்பில் நேற்றைய 'ஈழநாட்'டில் வெளியான செய்தியில் யாழ்ப்பாணம் சிறைச்சாலை அதிகாரி திரு. ஜான்சன் என வெளியாகியிருந்தது அவரது பெயர் திரு சி ரி. ஜான்ஸ். சிறைச்சாலையைச் சேர்ந்த ஒரு உத்தியோகஸ்தரான திரு. எம். சி. நல்லதம்பியின் பெயர் நல்லநாதன் என தவறுதலாக வெளியாகியது.

## கி. மு. சங்க நிர்வாகிகள்

மல்லாகம், ஞாயிறு

தரும்பசிட்டி கிராம முன்னேற்றச் சங்க 12-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் வலி-வடக்குக் காரியாதிகாரி திரு பீ எல் பற்றிக் தலைமையில் கிராமமுன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. பின்வருவோர் நிர்வாகசபையினராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப் பட்டனர்

தலைவர் தா இளையதம்பி ஜே பி, உப தலைவர் வ கிருஷ்ணசாமி (மயிலிட்டி கிராமசபைத் தலைவர்), இணைக்காரியதரிசிகள் மு சுந்தரராஜா. சி கனகசுந்தரம், தனாதிகாரி மா இளையதம்பி

...கிளை திரு. எஸ் ஜே வி செல்வநாயகத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## புதிய காரியாதிகாரி பிரிவு

பருத்தித்துறை, ஞாயிறு

வடமராட்சியை இரு காரியாதிகாரி பிரிவுகளாகப் பிரித்து வடமராட்சி வடக்குக்கு ஒரு காரியாதிகாரியும், வடமராட்சி தெற்குக்கு ஒரு காரியாதிகாரியுமாக நியமிக்கும் நோக்கத்துடன் உடுப்பிட்டித் தொகுதிக்கென ஒரு காரியாதிகாரி பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

அநேகமாக இக்காரியாதிகாரியின் காரியாலயம், மத்திய கேந்திரமான நெல்லியடிப் பகுதியில் அமைக்கப் படுமெனத் தெரிகிறது

## அருணோதயாக் கல்லூரி 75-வது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் 75-வது ஆண்டு நிறைவிழா இன்று மாலை கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

கல்லூரியின் புதிய கட்டடத்தை திரு எஸ். ஜே வி. செல்வநாயகம் திறந்து வைப்பார். வடமாநில வித்தியாதிபதி திரு எஸ். தணிகாசலம் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

திரு. எம். வைரமுத்து ஸ்தாபகர் நினைவுரையும், திரு எஸ் சிவபாதசுந்தரம் எழுபத்திஐந்தாவது ஆண்டு நிறைவுரையும் நிகழ்த்துவார்கள்.

செனட்டர் எஸ். நடராஜா, திரு எஸ். இளையதம்பி, திரு. வி பொன்னம்பலம், திரு. ரி. ரிஜெயரத்தினம், திரு. எம். திருநாவுக்கரசு ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

(கா. நி)

## 'இந்நாட்டுப்பிரஜைகளல்லாதோருக்கு முடிக்குரியகாணிவழங்கப்படமாட்டாது'

கோட்டை, ஞாயிறு

இந்நாட்டுப் பிரஜைகளல்லாதவர்களுக்கு எந்தவிதத்திலும் முடிக்குரிய நிலங்கள் வழங்கப்படமாட்டாது என காணி விவசாய அமைச்சர் திரு சி. பி. டி. சில்வா தெரிவித்துள்ளார்

கடந்த காலங்களில் இக் காணிகளைப் பெற்ற பலர் அவற்றை இந்நாட்டுப் பிரஜைகளல்லாதவர்களுக்கு விற்றோ அல்லது ஈடு வைத்தோ பணம் பெற்றுள்ளார்கள் இதனால் இந்நாட்டுப் பிரஜைகளல்லாத பலர் முடிக்குரிய நிலங்களில் குடியேறியுள்ளனர்.

தற்பொழுது இதைத் தடுப்பதற்குக் காணி விவசாய அமைச்சு சட்டங் கொண்டுவந்துள்ளது இதன் மூலம் குடியேற்ற வாசிகளுக்குக் கொடுக்கப்படும் நிலத்தை அவர்கள் இந்நாட்டுப் பிரஜைகள் அல்லாதோருக்கு விற்றால் அல்லது ஈடுவைத்தால் அவர்களது நிலம் அரசாங்கத்தால் கைப்பற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

இந்நாட்டுப் பிரஜைகளல்லாத பலர் முடிக்குரிய நிலங்களில் குடியேறியுள்ளதைச் சுட்டுக்காட்டி அறிக்கைகள் பல அமைச்சுக்கு அனுப்பப்பட்டதைத் தொடர்ந்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. இத்தகைய குடியேற்றவாசிகளை முடிக்குரிய காணிகளிலிருந்து வெளியேற்றுமாறும் உத்தரவுபிறப்பிக்கப்பட்டதோடு காணியமைச்சின் புதிய சட்டத்தை நில அதிகாரிகள் சட்டவிரோதமாக முடிக்குரிய காணிகளில் குடியேறுபவர்களுக்குத் தெரிவித்து வெளியேறும்படி தெரிவிக்க வேண்டுமெனவும் அமைச்சு உத்தரவிட்டுள்ளது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்காசிய நெருக்கடியைத் தீர்த்துவைக்க வல்லரசு நாடுகளுக்கு கோரிக்கை

## ஆபிரிக்க நாடுகள் மாநாட்டில் எதியோப்பியமன்னர்வற்புறுத்தல்

அடிஸ்அபாபா, செப். 7

மேற்காஸிய நெருக்கடியைத் தீர்த்துவைப்பதற்கு தீவிர நடவடிக்கைகளில் இறங்கும்படி எதியோப்பிய மன்னர்ஹெய்லிசெலாசி வல்லரசு நாடுகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

ஆபிரிக்க நாடுகள் ஒற்றுமை ஸ்தாபனத்தின் மாநாட்டுக்குத் தலைமைவகித்து மன்னர் ஹெய்லிசெலாஸி பேசினார்.

இந்த மாநாட்டில் 41 ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்கிறார்கள். ஆபிரிக்கா நாடுகளுக்கிடையில் ஒற்றுமை, நைஜீரிய உள்நாட்டுப்போர், மேற்காஸிய நெருக்கடி போன்ற விஷயங்களை இம்மாநாடு ஆராயவிருக்கின்றது.

ஆபிரிக்காநாடுகள் காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபடும் வரை உண்மைவிடுதலையை அனுபவிக்கமுடியாது. ஆபிரிக்க நாடுகள் மேலும் பல தியாகங்கள் செய்வதற்குத் தயாராகவேண்டும் என்று மன்னர் ஹெய்லிசெலாஸி கூறினார்.

நைஜீரியப்பிரச்னைக்கு இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுஒன்று கண்டுபிடிக்கவேண்டும் என்றும் எதியோப்பிய மன்னர் வற்புறுத்தினார்.

நைஜீரிய அதிபர் ஜெனரல் கோவான் பேசும்போது, சுமது நாட்டின் எல்லைகள் விஷயத்தில் தம்மால் பேரம் பேசிக்கொண்டிருக்க முடியாது என்றும் பியாப்ரா சண்டையைக் கைவிடுவதற்குமுன்வரவேண்டும் என்றும் வற்புறுத்தினார்.

ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபன மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஐ நா பொதுக்காரியதரிசி யுதாண்ட்டும் அடிஸ்அபாபா வந்து சேர்ந்துள்ளார்.

---

பம்பாயில் தமிழ் நாடு அமைச்சர் சொன்னது

# இந்தி மீது தமிழர்களுக்கு வெறுப்பு கிடையாது

## கட்டாயத் திணிப்பை தான் எதிர்க்கிறார்கள்

பம்பாய், செப். 7

தமிழ்நாட்டு மக்கள் இந்தி மொழி மீதோ வேறு எந்த மொழி மீதோ வெறுப்பு பாராட்டவில்லை. ஆனால் இந்தி தம்மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படுவதை தான் அவர்கள் எதிர்க்கிறார்கள் என்று தமிழ்நாடு அமைச்சர் திரு. மாதவன் பம்பாயில் கூறினார்.

பம்பாய்த் தமிழ்ச்சங்கத்தில் திரு மாதவன் பேசினார்.

மகாராஷ்டிரத்தில் வாழும் தமிழ்மக்கள் அங்குள்ள மக்களின் கலாச்சாரப் பண்புகளில் சிறந்தவற்றை எடுத்துக்கொண்டு அந்தப் பகுதியின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்று திரு மாதவன் கேட்டுக்கொண்டார்.

பம்பாயில் தொழில் வளர்ச்சி பற்றிய விவகாரங்களில் விசேஷ அக்கறை காட்டியதாக பின்னர் திரு. மாதவன் நிருபர்களிடம் தெரிவித்தார். தமிழ்நாட்டில் லாபகரமான திட்டம் ஏதாவது உருவாக்கப்படுவதாக இருந்தால் அவற்றில் கவனம் செலுத்த அவர்கள் தயாராக உள்ளனர் என்றார்.

தொழில் வளர்ச்சிக்காக தமிழக அரசு எடுத்த நடவடிக்கைகளையும், தமிழ்நாட்டில் தொழில்களைத் தொடக்க விரும்புவோருக்குக் காட்டப்படும் சலுகைகளையும், பாதுகாப்புகளையும் அவர்களிடம் தாம் எடுத்துரைத்ததாக அமைச்சர் தெரிவித்தார்.

தொழில் வளர்ச்சிக்காக மகாராஷ்டிர அரசு அளிக்கும் வசதிகளையும், திட்டங்களையும் அமைச்சர் பாராட்டினார். இத்துறையில் மகாராஷ்டிர அரசின்

---

## யு. எஸ். தூதரை விடுவிக்க பெருமுயற்சி

பிரேஸில்லியா, செப். 7

பிரேஸில் நாட்டில் உள்ள அமெரிக்கத் தூதரை கடத்திச் சென்றவர்கள் தெரிவித்த நிபந்தனைகளை நிறைவேற்றும் முகமாக பிரேஸில் அரசாங்கம் அரசியல் கைதிகள் 15 பேரை ஏற்றிக் கொண்டு ஒரு விமானம் மெக்ஸிக்கோவுக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிறது.

மெக்ஸிக்கோவில் இந்தக் கைதிகள் விடுவிக்கப்பட்ட பின்னர் தான் அமெரிக்க தூதரை விடுவிக்க முடியும் என்று புரட்சியாளர்கள் அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் விடுவிக்கும்படி கோரியுள்ள எல்லா கைதிகளும் விமானத்திலிருப்

---

திசைதிருப்பப்பட்டவிமானத்தின்

# துணைவிமானி சுட்டுக் கொலை

கொலம்பியா, செப்.7

ஈக்குவேடர் விமானம் ஒன்று துப்பாக்கிமுனையில் திசை திருப்பப்பட்டபோது விமானத்தின் துணைவிமானி சுட்டுக் கொல்லப்பட்டார், விமானத்தைத் திசைதிருப்பி கியூபாவுக்குப் போகும்படி துப்பாக்கியுடன் வந்த சிலர் விமானியைக் கட்டாயப்படுத்தினார்களாம், அப்பொழுது ஏற்பட்ட ரகளையில் துணைவிமானி சுடப்பட்டு மாண்டதோடு வேறுசிலரும் காயமடைந்தார்களாம்.

இந்தச்சம்பவம் நடந்து கொண்டிருக்கும்போது ஜெனிவாவில் ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்டுடன் சர்வதேச விமானிகள் சங்கப்பிரதிநிதிகள தங்கள குறைகளைப்பற்றிக்கூறிக் கொண்டிருந்தார்கள.

விமானங்கள் பலவந்தமாக திசைதிருப்பப்படுவதற்கு ஐ. நாமுற்றுப்புள்ளி வைக்காது போனால் சர்வதேச விமானிகள் வேலைநிறுத்தம் ஒன்றை நடத்தப் போவதாக அப்பிரதிநிதிகள் நிருபர்களிடம் கூறினார்கள். விமானங்கள் பலவந்தமாக திசைதிருப்பப்படுவது குறித்து ஐ. நா. பாதுகாப்புசபையிடம்புகார் செய்யப்போவதாகவும் அவர்கள் கூறினர்.

யுதாண்ட் பின்னர் நிருபர்களிடம் பேசுகையில் விமானிகள் வேலைநிறுத்தத்தை தாம் ஆதரிக்கவில்லையென்றும் ஆனால் விமானங்கள் திசை திருப்பப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டுமென்றும் கூறினார்.

---

## பாதயாத்திரை

உடுப்பிட்டி, ஞாயிறு

நல்லூர் கந்தசுவாமிகோவில் உற்சவத்தை முன்னிட்டு பல்லவராயன்கட்டுமுழங்காவில் என்னுமிடத்திலிருந்து பக்தர்கள் கோஷ்டியொன்று பாதயாத்திரை மூலம் நல்லூர் ஆலயத்திற்கு செல்லவிருக்கிறது,

இன்று முழங்காவில் பிள்ளையார் கோவிலில் ஆரம்பமாகும் பாதயாத்திரை பல்லவராயன்கட்டு பூநகரிசங்குப்பிட்டி கேரைதீவு,நாவற்குழி ஆகிய கிராமங்களுக்கூடாக நல்லூரைச் சென்றடையும். முழங்காவில் திரு சபைத் தலைவர் திரு மா சிவசுப்பிரமணியம்தலைமையில் பாதயாத்திரை நடைபெறும்.

0 0

வேலணை, ஞாயிறு

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்திலிருந்து வேலணை கலாமன்ற பஜனைக் கோஷ்டி புதன்கிழமை பாதயாத்திரையாக மண்கும்பான் பிள்ளையார் கோவில் வழியாக திரு சபா சதாசிவம் தலைமையில் நல்லூர்க் கந்தன் ஆலயத்தை சென்றடையும்.

---

## வடபகுதி விவசாயிகள் மகிழ்ச்சி

சுழிபுரம். ஞாயிறு

கடந்த ஒரு மாத காலமாக கொழும்புக்கு வடபகுதி விவசாய உற்பத்தியாளர் சமாஜத்தினுல் அனுப்பப்படும் வெங்காயம் தடைபட்டிருந்தது. தற்போது இத்தடை நீக்கப்பட்டு மீண்டும் அனுப்பத் தொடங்கியிருப்பதால் இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி

---

## 'தமிழ் அறிஞர் வரலாற்றில்' பண்டிதமணி

உரும்பராய், ஞாயிறு

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ் அறிஞர்கள் வரலாற்றினை எழுதி வெளியிடவுள்ளது அவ்வரலாற்றுத் தொகுப்பில் ஈழத்து அறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் வரலாறும் இடம் பெறும்.

பண்டிதமணி வாழ்க்கை வரலாறு பற்றிய குறிப்புகளையும், அவர் ஆற்றிய

---

## குற்றத்தை ஒப்புக்கொண்டார்

மட்டுவில், சனி

கைக்கடிகாரத்தைத் திருடி அடைவு வைத்த ஒருவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை தொடர்ந்து தீர்ப்பை இம் மாதம் 12-ம் திகதி வரை ஒத்தி வைத்து அதுவரை அவரை றிமாண்டில் வைக்கும் படி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா உத்தரவிட்டார்.

கிளிநொச்சிப் பொலிசாரால், சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டிற்கு கொண்டுவரப்பட்ட இந்த வழக்கில்' நவாலி வாசியும் ஒட்டிசுட்டான் விவசாயப் படையைச் சேர்ந்தவருமான அரியகுட்டி செல்லத்துரை என்ற (22வயது)வாலிபர், இராசையா கனகரத்தினம் என்பவருக்கு சொந்தமான ஒரு கைக்கடிகாரத்தைத் திருடி ரூபா 15க்கு அடைவு வைத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இந்த வழக்கை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே விக்னராஜா விசாரணைக்கு எடுத்துக் கொண்டார் விசாரணையின்போது செல்லத்துரை குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

மாஜிஸ்திரேட் அவரின் கைவிரல் அடையாளம் எடுக்கும்படி பொலிசாருக்கு உத்தரவிட்டு, தீர்ப்பை இம்மாதம் 12-ம் திகதி வரை ஒத்தி வைத்து அதுவரை வாலிபரை றிமாண்டில் வைக்கும் படியும் உத்தரவிட்டார்.

---

## இணைந்தன

உடுப்பிட்டி, ஞாயிறு

தென் கருணை இளைஞர் மன்றம், மேல்கரவை இளைஞர் மன்றம் ஆகிய இரண்டு மன்றங்களும் சமூக நலன் கருதி ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. தென் கருணை, மேல் கரவை இளைஞர் மன்றம் என்னும் பெயரில் புதிய மன்றம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

இம்மன்றத்தின் முதல் முயற்சியாகக் கடந்த 5 வருடங்களாகக் கவனிப்பாரற்ற நிலையில் சேறு நிரம்பிப் பாவிக்கமுடியாத நிலையில் இருந்த உச்சில் மாணிக்கவளைக் குளம் சிரமதான மூலம் துப்புரவாக்கப்பட்டது. ஆசிரியர் திரு. பொ. தம்பு தலைமையில் நடைபெற்ற இச்சிரமதான இயக்கத்தில் ஏராளமான இளைஞர்களும், ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். இச்சிரமதானப் பணிக்கு இப்பகுதிப் பெரியார்கள் பண உதவி புரிந்து ஊக்குவித்த

---

# "தோட்ட நிலங்கள் மீது வரிவிதிக்க வேண்டாம்"

பருத்தித்துறை, ஞாயிறு

நெல்லியடிப் பட்டினசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள தோட்ட நிலங்கள் மீது சோலைவரி விதிக்க வேண்டாமெனக் கோரும் மகஜரொன்றை நெல்லியடி வரியிறுப்பாளர்சங்கம் மேற்படி பட்டினசபை விசேஷ ஆணையாளர் திரு ஏ. ஏ. யோசேப்பிடம் சமர்ப்பிக்க விருப்பதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள சில பட்டினசபைகள் தோட்ட நிலங்களின் மீது வரி விதிப்பதில்லை என்றும், ஏற்கனவே வறுமையில் வாழும் விவசாயிகள் மீது இவ்வித வரிச்சுமையை ஏற்றுவது ஜனநாயகத்திற்கு விரோதமானது என்றும் 'அதிக உணவுற்பத்தி' வேண்டும் என்ற அரசாங்கக் கொள்கைக்கு இது முரண்பாடானது என்றும் இம்மகஜர் சுட்டிக்காட்டுகிறது.

---

# பீட்றூட் கிழங்கு உற்பத்தியாளர் கவலை

சுழிபுரம், ஞாயிறு

பண்டத்தரிப்பு பகுதியில் இம்முறை விவசாயிகள் அதிக அளவில் பீட்றூட்கிழங்கு விளைவித்துள்ளனர். ஆனால் தற்போது அறுவடை செய்யும் இக் கிழங்குகளை இலாபமாக விற்க முடியாமல் சிரமப்படுகின்றனர். இறாத்தல் 10 சதம் தொடக்கம் 15 சதம் வரை விற்கப்படுவதினால் விவசாயிகள்மிகுந்த நஷ்டம் அடைந்துள்ளனர். அரசாங்க விற்பனை இலாகாவினர் இவற்றை வாங்கி நாட்டின் பிற பகுதிகளுக்கு அனுப்பிவிற்றால் நல்லது என்று இப்பகுதி விவசாயிகள் அபிப்பிராயப் படுகின்றனர்.

---

# வாணவேடிக்கையின் போது கண்ணைப் பறிகொடுத்தார்

உடுப்பிட்டி, ஞாயிறு

வாணவேடிக்கை பார்க்கச் சென்ற சிறுவன் ஒரு கண்ணைப் பறி கொடுத்தார். வதிரி உல்லியனொல்லை அம்மன் ஆலய 7ம் திருவிழாவின் போது இவ் விபத்து நிகழ்ந்தது.

சுவாமி வீதிவலம் வருகையில் வாணவேடிக்கைகள் இடம் பெற்றன. வாணவேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருக்கையில் திடீரென மேலெழும்ப வேண்டிய ராக்கெட் வாணம் கீழே பாய்ந்து சென்றதால் பன்னிரண்டு வயதுச் சிறுவனொருவன் ஒருகண்ணில் படுகாயங்களுடன் அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

---

# பஸ் பிரயாணிகள் 'பாத யாத்திரை'

உடுப்பிட்டி, ஞாயிறு

நெல்லியடியிலிருந்து புருப்பொறுக்கிக்கு இரவு 9-30 மணிக்குப்பின்னர் பஸ் சேவை இல்லாததால் கொடிகாமத்திலிருந்து கரணவாய் செல்லும் பஸ் பிரயாணிகள் "பாதயாத்திரை" செய்து வருகின்றனர்.

கொடிகாமத்திலிருந்து நெல்லியடி,மூத்த விநாயகர் கோவிலடி, புருப்பொறுக்கி ஊடாகத் தொண்டமானாறு செல்லும் பஸ்சேவை நிறுத்தப் பட்டதைத் தொடர்ந்தே இவ் வித கஷ்டநிலைக்குப் புகையிரதப் பிரயாணிகள் உள்ளாகி யுள்ளனர்.

முன்னர் குறிப்பிட்ட சேவையில் ஈடு பட்டுள்ளது. இதனால் இரவு ரயிலில் வீடு திரும்புபவர்கள் கொடிகாமம் புகையிரத நிலையத்திலிருந்து நெல்லியடி மட்டுமே பஸ்ஸில் செல்ல முடியும் நெல்லியடியிலிருந்து கரணவாய் செல்பவர்கள் மூன்றுமைல் தூரம் நடந்து சென்றே வீட்டை அடைகின்றனர்.

சிலசமயங்களில்ரயில்தாமதித்து வந்தால் இரவு 1மணிக்கு தனியே பொருட்களுடன் நடந்து செல்லவேண்டியுள்ளது இதனால் தாம் அனுபவித்து வரும் கஷ்டங்களை விளக்கி மீண்டும் இரவு ரயில் சேவை பஸ்ஸைக் கரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றை [illegible]த்துக்கொண்டு அந்தப் பகுதியின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்று திரு மாதவன் கேட்டுக் கொண்டார்.

பம்பாயில் தொழில் வளர்ச்சி பற்றிய விவகாரங்களை அறியும் பொருட்டு மகாராஷ்டிரத் தொழில் பிரமுகர்களுடன் தமிழக தொழில் அமைச்சர் திரு. மாதவன் பேச்சு நடத்தினார்.

தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க தமிழக அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்து பம்பாய் தொழிலதிபர்கள்

தொழில் வளர்ச்சிக்காக மகாராஷ்டிர அரசு அளிக்கும் வசதிகளையும், திட்டங்களையும் அமைச்சர் பாராட்டினார். இத்துறையில் மகாராஷ்டிர அரசின் அநேக நடவடிக்கைகளை தமிழ்நாடு பின்பற்ற முடியும், பின்பற்றும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் காங்கிரஸ் மந்திரிசபை இருந்தபோது தொழில் வளர்ச்சிக்காக திரு வெங்கட்ராமன் ஆற்றிய பணியை திரு. மாதவன் பாராட்டினார்.

பின்னர்தான் அமைச்சகத்... தூதரை விடுவிக்க முடியும் என்று புரட்சியாளர்கள் அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் விடுவிக்கும்படி கோரியுள்ள எல்லா கைதி[illegible]களும் விமானத்திலிருப்[illegible]தாகக் கூறப்படுகின்றது.

அனுப்பப்படும் வெங்காயம் தடைபட்டிருந்தது. தற்போது இத்தடை நீக்கப்பட்டு மீண்டும் அனுப்பத் தொடங்கியிருப்பதால் இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

...றுத் தொகுப்பில்... அறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் வரலாறும் இடம் பெறும்.

பண்டிதமணி வாழ்க்கை வரலாறு பற்றிய [illegible]குறிப்புகளையும், அவர் ஆற்றிய சமய இலக்கியப் பணிகளோடு தொடர்பான விஷயங்கள் பற்றிய விளக்கக் குறிப்புகளையும் கொடுத்துதவுமாறு பண்டிதமணி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினால் வேண்டப்பட்டுள்ளார்.

தமிழ் அறிஞர்கள் வரலாறு சேகரிக்கும் பணியில் அண்ணாமலைப் பல்கலைக்கழக தமிழ் கீழைத் தேயப்பகுதி விரிவுரையாளர் வித்வான் கே. என். சிந்தாமணி ஈடுபட்டுள்ளார்,

...கத்தில் ஏராளமான இளைஞர்களும், ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். இச்சிரமதானப் பணிக்கு இப்பகுதிப் பெரியார்கள் பண உதவி புரிந்து ஊக்குவித்தனர்.

செல்லும் பஸ்சேவை நிறுத்தப் பட்டதைத் தொடர்ந்தே இவ் வித கஷ்டநிலைக்குப் புகையிரதப் பிரயாணிகள் உள்ளாகியுள்ளனர்.

முன்னர் குறிப்பிட்ட பாதைகளின் ஊடாகச் சேவையிலீடுபகட்ட பஸ் தற்போது வதிரி ஊடாகச் ...க்கு தனியே பொருட்களுடன் நடந்து செல்லவேண்டியுள்ளது இதனால் தாம் அனுபவித்து வரும் கஷ்டங்களை விளக்கி மீண்டும் இரவு ரயில் சேவை பஸ்ஸைக் கரணவாய்க்கு விடுமாறு இப்பகுதி பிரயாணிகள் உபசபாநாயகரைக் கோரி உள்ளனர்.

---

தமிழ்நாட்டில்

# மதுவிலக்கை தொடர்ந்து அமுல் நடத்துவது கஷ்டமாம்

## மத்திய அரசிடம் நிதி உதவி கோருகிறார் கருணாநிதி

சென்னை, செப். 7

மத்திய அரசு நிதியுதவி அளிக்காதுபோனால் தமிழ் நாட்டில் மதுவிலக்கைத் தொடர்ந்து அமுல் நடத்துவது சாத்தியமாய் இருக்காதென்று தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. மு. கருணாநிதி மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்.

ராமேஸ்வரத்தில் காந்திஜியின் வாழ்க்கைக் குறிப்புகள் பற்றிய ரயில் கண்காட்சியைத் திறந்துவைத்து திரு கருணாநிதி பேசினார். பத்து ரயில் பெட்டிகளில் காந்திஜி பற்றிய கண்காட்சி ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது

தமிழ்நாடு காந்திஜியின் கொள்கைகள் பலவற்றைக் கடைப்பிடித்துவருகின்றது காந்திஜிக்கும் தமிழ்மக்களுக்குமிடையிலான அன்புப் பாலம் அழிக்கமுடியாது. காந்திஜி இந்தியாவில்மட்டுமல்லாது உலகம் முழுவதிலும் போற்றிப் புகழப்படுகிறார் என்று கருணாநிதி கூறினார்

---

## [illegible]யரோ[illegible] தடுப்பு கொடித்தினம்

யாழ்ப்பாணம், சனி

இலங்கை கயரோகதடுப்பு நிவாரண சங்கத்தின் கொடித்தினவிழா அடுத்த மாதம் 2-ம் திகதி நாடு பூராவும் கொண்டாடப்படவிருக்கின்றது.

இச்சங்கத்தின் புதிய நடவடிக்கையாக கயரோக நோயாளர்களின் தேவைகளைக்கவனிக்கவும் அவர்கள் மத்தியில் பணிபுரியவும் தொண்டர்கள் நாடெங்கும் சேர்க்கப்படுகின்றார்கள்

சங்க நிதிக்கு பொருளுதவி கோரி நடைபெறும் இக்கொடித்தின விற்பனைக்கு பொது ஆதரவு கொடுக்குமாறும், விற்பனை செய்யப் பொதுமக்களை முன்வருமாறும் இதுசம்பந்தமாகப் பொதுமக்களுக்கு விடுக்கப்பட்டிருக்கும் வேண்டுகோள் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க நிதிஉதவி பெறுதிருக்கும் கயரோகிகளுக்கு கடந்த 21 வருட காலமாக இச்சங்கம் நிதிஉதவி புரிந்து வருவதாகவும் இதற்காக நாடெங்கும் 45 கிளைகள் ஸ்தாபிக்கப்பட்டு இயங்கி வருவதாகவும் இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(கா நி)

---

## லண்டன் செல்கிறார்

சித்தன்கேணி, ஞாயிறு

வட்டுக்கோட்டையைச் சார்ந்த செல்வன் சிதம்பரநாதன் சிவநாதன் மின்பொறியியலில் பயிற்சிபெறுவதற்காக இம்மாதம் நடுப்பகுதியில் லண்டனுக்குச் செல்கிறார்.

தற்பொழுது கொழும்பு பிறவுண்ஸ் கம்பனியில் கடமையாற்றும் இவர் கொழும்பு மேர்க்கண்டையில்வங்கியில் கடமையாற்றி தற்பொழுது 'ஷெட்டூர்' தேயிலை கம்பனியில் அதிபராகக் கடமையாற்றும் பொ. சிதம்பரநாதனின் மகனாவார். இவர் யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார்.

---

# ஹனோய் நகரில் சோவியத் பிரதமர்

ஹனோய் செப்.7

வடவியட்னும் அதிபர் டாக்டர் ஹோ-சி மின் மரணச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின் ஹனோய் வந்துசேர்ந்துள்ளார்.

ஹனோய் வந்து சேர்ந்தவுடன் திரு கொஸிஜின் நிருபர்களிடம் பேசுகையில் ஹோ-சி-மின் மறைவு சோவியத் மக்கள் அனைவரையுமே துக்கத்தில் ஆழ்த்திவிட்டது என்றார்,

டாக்டர்ஹோ- சி- மினின் இறுதி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக பல்கேரியா, செக்கோஸ்லாவாக்கிய, போலந்து, ருமேனியா போன்ற நாடுகளிலிருந்து தூதுக் கோஷ்டிகள் ஏற்கனவே ஹனோய் வந்து சேர்ந்துள்ளன.

சீனப் பிரதமர்திரு. சூ. என் லாய் தலைமையில் வந்த தூதுகோஷ்டி திடீரென திரும்பிப் போய் இருப்பது அவதானிகள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கின்றது சீனத்தூதுகோஷ்டி ஹோ-சி மின் இறுதியாத்திரையில் கலந்துகொள்வதற்குத் திரும்பிவரக்கூடுமெனக் கருதப்படுகின்றது.

---

இந்தியாவில்

# தினசரி 70 லட்சம் பத்திரிகை வினியோகம்

புதுடில்லி, செப். 7

1968-ல் இந்தியாவில் 70·41 லட்சம் நாள் இதழ் பத்திரிகைகள் வினியோகமாகியுள்ளன. இந்திய பத்திரிகைகள் பதிவாளர் அறிக்கையில் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் பல பதிப்புகளை வெளியிடும் பத்திரிகைகள் 28 வெளியாகியுள்ளன.

இந்தப் பத்திரிகைகளில் 59.4 சதவீதம் தனிநபர்களாலும் 19 9 சங்கங்களாலும் சமூக ஸ்தாபனங்களாலும் 6·5 சதவீதம் நிறுவனங்களாலும் கூட்டுமுறையிலும் 4 8 சதவீதம் கூட்டுகம்பெனிகளாலும் 3.9 சதவீதம் மத்தியமாநில அரசுகளாலும் 5 5 சதவீதம் மற்றவர்களாலும் நடத்தப்பட்டன.

பெரும்பான்மையான பத்திரிகைகள் தனிப்பட்டவர்களால் நடத்தப்பட்டபோதிலும் முழுப்பத்திரிகை விநியோகத்தின் அவர்கள் பங்குகள் 29 சத வீதமே இருந்துள்ளன.

1968-ல் 82 பத்திரிகைகள் பல்வேறு அரசியல்கட்சிகளால் வெளியிடப்பட்டுள்ளன. இந்திய காங்கிரஸ் கட்சிக்கு 30 பத்திரிகைகள் சொந்தமாக இருந்துள்ளன, அதற்கு அடுத்த படியாக இந்தியகம்யூனிஸ்ட்கட்சிகள் 26 பத்திரிகைகளையும், பிரஜா சோஷலிஸ்ட்கட்சி 5 பத்திரிகைகளையும் மற்றக் கட்சிகள் 20 பத்திரிகைகளையும் வெளியிட்டுள்ளன.

மகாராஷ்டிராவிலிருந்து 1516 பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் வெளியாகியுள்ளன உத்தரபிரதேசத்திலிருந்து 1433 பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் வெளியாகியுள்ளன. நாள்இதழ்களைப் பொறுத்தவரை அதிகமான (99) பத்திரிகைகள் உத்தர பிரதேசத்திலிருந்து வெளியாகியுள்ளன. மகாராஷ்டிரத்திலிருந்து 90 தினசரிகள் வெளியாகியுள்ளன.

புதுடில்லியிலிருந்து மட்டும் 1155 பத்திரிகைகள் (27 தினசரிகள்) வெளியாகியுள்ளன.

மொழிவாரியாகப் பார்க்கையில் ஆங்கிலத்தில் அதிகப்படியான பத்திரிகைகள் (68.9 சதவீதம்) வெளியாகியுள்ளன.

1967-ல் ஒரு நூற்றுண்டுககுமேல் வெளிவரும் சஞ்சிகைகள் 13 இருந்தன. கல்கத்தாவிலிருந்துவரும் அமிர்தபஸார் பத்திரிகை (ஆங்கிலம்) 1968-ல் ஒரு நூற்றுண்டை எட்டிப்பிடித்துள்ளது. 50 வருடத்திலிருந்து 100 வருடம் வரை வயதுள்ள பத்திரிகைகள் 176 இருக்கின்றன. இவைகளில் 24 தினசரிகள் 64 வாராந்தரிகள், ஆறு இருவாரத்துக்கொருமுறையும் 71மாதாந்தரிகளாகவும் ஐந்து மூன்று மாதத்துக்கொரு முறையும் மூன்று ஆறுமாதத்துக்கொரு முறையும் மூன்று வருடத்துக்கொருமுறையும் வெளியாகின்றன.

நாட்டில் மிகவும் பழமையான பத்திரிகை குஜராத் மொழியில் பம்பாயிலிருந்து வெளிவரும் பம்பாய் சமாச்சார் என்ற தினசரியாகும். 1822-ல் வாராந்தரியாக ஆரம்பிக்கப்பட்டு 1855-ல் தினசரியாக இது பரிணமித்தது. ஆங்கிலத்தில் மிகப் பழமையான பத்திரிகை பம்பாயிலிருந்துவரும் டைம்ஸ் ஒவ் இந்தியாவாகும். 1838-ல் வாரப் பத்திரிகையாகஆரம்பிக்கப்பட்டு 1850-ல் நாள் இதழாக்கப்பட்டது.

---

## 4 மாதச் சிறை

மட்டுவில், ஞாயிறு

சாவகச்சேரி பஸ்நிலையத்தில் தங்கியிருந்த பஸ் பிரயாணி ஒருவரிடம் 'பிக்பொக்கட்' அடித்ததாக வவனியாவைச் சேர்ந்த கதிரன் இலட்சுமணன் என்பவர்மீது சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராஜாவினு விசாரணை செய்யப்பட்டபோது இலட்சுமணன் மீது சாட்டப்பட்ட குற்றம் நிருபிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாஜிஸ்டிரேட் அவருக்கு 4 மாதச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

---

## மக்கள் தேவைக்கு

மன்னார், ஞாயிறு

மாந்தைப் பிரிவிலுள்ள ஆள்காட்டி வெளி என்னும் கிராமத்தில் ரூபா 24,000 செலவில் அமைக்கப்பெற்ற கூட்டுறவுச் சில்லறை விற்பனை நிலையத்தை, வடபிரதேசக் கூட்டுறவு மேற்பார்வைச் சபைத் தலைவர் திரு. இ. இராசரத்தினம் திறந்து வைத்தார்.

மன்னார் அரசாங்க அதிபர், மாந்தைக் காரியாதிகாரி, மன்னார்க் கூட்டுறவு ஆணையாளர், மன்னார் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. ஏ. அழகக்கோன் ஆகியோர் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்.

ஆள்காட்டி வெளிச் சங்கத் தலைவர் திரு. அந்தோனி பேதுறு இதுசம்பந்தமாக எடுத்திருந்த முயற்சியைப் பலர் பாராட்டினர்.

---

## புனருத்தாரணம்

உடுப்பிட்டி, ஞாயிறு

பருத்தித்துறை ஸ்ரீசாரதா நிலையச்சேவாச்சிரமம் முதலியார் திரு.க. சுப்பிரமணியம் தலைமையில் புனருத்தாரணம் செய்து வைக்கப்பட்டுள்ளது

புலோலி பசுபதி சிவன் கோவிலில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அனாதைப்பிள்ளைகள் விடுதி நிறுவுவதென்றும் இதற்கு நிதி சேகரிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

முதலியார் க. சுப்பிரமணியம், வடமராட்சிக் காரியாதிகாரி திரு. எஸ் ஜெயகாந்தன், திரு. மு. பொ. வீரபாகு, திரு. க. கணபதிபிள்ளை, திரு. நாகரத்தினம், திரு. இரந்தினசபாபதி (பொதுச்செயலாளர்) ஆகியோர் தர்மகர்த்தாக்கள் சபைக்குத்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

---

## எதிர்பாராதது!

மட்டுவில், ஞாயிறு

முயல்வேட்டையாடச் சென்ற ஒருவருக்கு ஆறடி வேங்கைப்புலி அகப்பட்டதாம்.

மட்டுவில் வடக்கு வாசியான குஞ்சன் சின்னத்தம்பி என்பவர் மட்டுவிலுக்கும் புத்தூர் வண்ணாத்தியன் என்ற இடத்துக்குமிடையில் இந்த புலியைச் சுட்டார்.

இப்பகுதிகளில் வேங்கைப் புலிகள் நடமாட்டமிருக்குமோ என்ற சந்தேகம் இப்போது இங்குள்ள மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

---

# சோமசுந்தரப் புலவருக்கு பிரைவில் சிலை

உடுப்பிட்டி, ஞாயிறு

நவாலியூர்ச்சோமசுந்தரப் புலவருக்குச் சிலை அமைக்கும்பணி துரிதமாக ஆரம்பமாகிஉள்ளது இத்தகவலைக் கரவெட்டி வாணிகலைக் கழக இயக்குநரும்சோமசுந்தரப்புலவர் சிலை அமைப்புக்குழுத்தலைவருமான பண்டிதர் திரு. க. வீரகத்தி தெரிவித்துள்ளார்.

முதலில்பரீட்சார்த்தமாகச் சோமசுந்தரப்புலவரின் சிலை சிறிய அளவில் உருவாக்கப்படுமென்றும், அச்சிலை நெல்லியடியில் நிறுவப்படுமென்றும் அவர் சொன்னார். இதன் பின்னர் போதிய பொருளுதவி கிடைத்ததும் நாடு பூராவிலுமுள்ள பல மன்றங்களின் ஆதரவுடன் சோமசுந்தரப்புலவரின் சிலை பெரிய அளவில் உருவாக்கப்பட்டுப் புலவரின் பிறந்தஇடமான நவாலியில் நாட்டப்படும் என்றும் அவர் கூறினார்.

சோமசுந்தரப் புலவரின் சிலையை உருவாக்குவதற்கான பொறுப்புக்களைத் திருநெல்வேலியைச்சேர்ந்த பிரபல சிற்பி திரு. இராமசேது ஏற்றுள்ளார். தத்ரூபமான முறையில் சிலையை அமைக்கவேண்டுமெனதாம் விரும்புவதால் சோமசுந்தரப் புலவரின் பெரியஅளவிலான படமொன்றைத் தந்துதவுமாறு திரு இராமசேது பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிலையமைப்புக்கு நிதி உதவி புரிய விரும்புவோர் திரு நெல்லை க. பேரன் (க. பேரம்பலம்) காசுக் கணக்கீட்டுக்கிளை, தபால் மாஅலுவலகம், கொழும்பு1 என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

பின் வருவோர் சிலையமைப்புக்குழு நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

போஷகர்கள்- திரு. மு. சிவசிதம்பரம் (உபசபாநாயகர்), திரு க துரைத்தினம்(பருத்தித்துறை எம்.பி) தலைவர்- பண்டிதர் திரு க. வீரகத்தி, உபதலைவர்- டாக்டர் திரு. ஆ. திருச்சிற்றம்பலம், பொதுக்காரியதரிசி- திரு. ஜெ. ஜேயக்குமார், உப செயலாளர்கள் திருவாளர்கள் சி. எஸ். ஆறுமுகம், அ. தேவச்சந்திரன், தனாதிகாரி- திரு: நெல்லை க பேரன், உப-தனாதிகாரி-திரு நா. இரமச்சந்திரன்.

---

## ஊர்காவற்றுறை அரசாங்க ஊழியர் சங்கம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

ஊர்காவற்றுறைத் தொகுதி அரசாங்க ஊழியர்களின் நலவுரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு ஊர்காவற்றுறைத் தொகுதி அரசாங்கம் ஊழியர் சங்கம் என்ற பெயரில் புதிய சங்கம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை சுங்க அதிகாரி திரு. டபிள்யூ. செல்லையா தலைமையில் நடைபெற்ற அமைப்புக் கூட்டத்தில் பின்வருபவர்கள் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பாதுகாவலர் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. பீற்றஸ், இணைப்பாதுகாவலர்கள் திருவாளர்கள் எஸ். விநாயகலிங்கம் (காரியாதிகாரி), அரியரத்தினம் (வேலணை மத்திய கல்லூரி அதிபர்), வண. எஸ் ஜே. ஸ்ரனிஸ்லஸ் (ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர்)

தலைவர்கள் திரு. எஸ். வஸ்தியாம்பிள்ளை (தபால் அதிபர்) திரு. எஸ். இம்மானுவல், (பட்டினசபைத் தலைவர், டாக்டர் சி. விஜயராசா (வைத்திய அதிகாரி)

காரியதரிசி திரு. ப. நடராசா, தனாதிகாரி திரு. ஆ. தெய்வேந்திரம் வைத்திய சுகாதார அதிகாரி ஊர்காவற்றுறை)

கணக்காளர் திரு. எம். ஸ்தனிஸ்லஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

அன்பும் அதிலிருந்து வரும் அசையாத உறுதியும் தான் சத்தியாக்கிரகியின் ஆயுதம்.

—மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆவணி மாதம் 23-ந் திகதி (8-.9-69)


## அரிசியில் கல்லும் மண்ணும்

தானம் கிடைத்த மாட்டைப் பல்லைப்பிடித்துப் பார்க்கக்கூடாதென்பார்கள். நமக்கு அரசாங்கம் வாராவாரம் இலவசமாக ஒருகொத்து அரிசியை விநியோகித்து வருகிறது. இறக்குமதியாகும் அரிசி சுத்தமாக இருக்கையில், இங்கு உற்பத்தியாகும் நாட்டரிசியில் கல்லும் மண்ணும் அதிகமாகக் கலந்து சமைத்துச் சாப்பிடவும் முடியாதபடி மிக மோசமாக இருப்பதாகப் பொதுமக்கள் நீண்டகாலமாகப் புகார்கள் கூறிவந்திருக்கிறார்கள். தானம் கொடுக்கும் அரிசிதானே என்று அரசாங்கம் இதுவரை சும்மா இருந்துவிட்டதுபோலும். என்றாலும் மக்களின் புகார்கள் அதிகரித்துள்ளதால் இவ்வாரம் இதுபற்றி நடவடிக்கை எடுக்க முற்பட்டுள்ளது வரவேற்கத்தக்கதாகும்.

நமது வயல்களிலே நெற்பயிர்களிலே நிச்சயம் கல்லும் மண்ணும்விளைவதில்லை, நெல்லை அரிசியாக்கும் மில்க்காரர்கள் தான் இந்தக் கலப்படத்துக்குப் பொறுப்பேற்கவேண்டும் அரசாங்க நிர்வாகத்தில் 16 மில்களும், தனிப்பட்டவர்கள் நிர்வாகத்தில் 528 மில்களும் வேலைசெய்வதாகத் தெரிகிறது. 1966—67 ம் வருடத்திலே சுமார் 2 லட்சத்து 24 ஆயிரம் டன் உள்நாட்டு நெல்லை இந்த மில்க்காரர்களுக்கு அரைப்பதற்கு கொடுத்திருக்கிறார்கள். நெல் உற்பத்தியாளருக்கு உத்தரவாத விலைகொடுப்பதுடன் மில்காரர்களுக்கும் அரசாங்கம் தகுந்த கூலியைக் கொடுக்கின்றது. சுத்தமான அரிசியாக அரைத்துக் கொடுக்க வேண்டுமென்று விதிகள் கூறினும் அதன்படி நடக்கவில்லை. இதற்கிடையே இருபுறமும் எவ்வளவு பெருச்சாளி வேலைகள் நடக்கின்றனவோ!

காகித அளவில் உத்தரவு போடுவதால் மட்டும் நிலைமை சீர்பெறுமென்றஉத்தரவாதமில்லை மில்கள் கொடுக்கும் அரிசியை நன்கு சோதனையிட்டு, கல் மண் முதலிய கலப்படமிருந்தால், அவற்றை நிராகரிப்பதுடன் இரண்டு தடவைக்கு மேல் குற்றம் செய்கிறவர்களின் லைசென்ஸைப் பறிமுதல் செய்துவிடுவதாக எச்சரிக்கை செய்து கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பின், பொதுமக்களுக்கு விமோசனம் இடைக்கமுடியும். பொதுமக்களும் கூப்பன் கடைகளில் இடைக்கும் நாட்டரிசியில் கலப்படமிருப்பின் உடனுக்குடன் அதைப்பற்றி மேலதிகாரிகளுக்கு புகார் செய்யவேண்டும். இலவச அரிசிதானே அதைப்பற்றி ஒன்றும் சொல்லமுடியாதென்று பேசாமல் இருக்கத் தேவையில்லை.

நமக்குக்கிடைக்கும்சீனத்து அரிசியும் பர்மிய அரிசியும் கலப்படமில்லாதிருப்பதற்குக் காரணமென்ன? அந்த நாடுகளில் அரிசி மில்கள் தேசிய உடைமையாகிவிட்டது தானா? இங்கு சிலகாலத்தில் நிலைமை சீரடையாவிட்டால். இங்கும் அரிசி மில்களையெல்லாம் தேசஉடைமையாக்க அரசாங்கம் தயங்கக்கூடாது அரிசிதான் மக்களின் உயிர்போன்றஉணவு. இதற்காக அரசாங்கம் செலவழிக்கும் பொதுப்பணம் கொஞ்சமல்ல பலகோடிகளாகும். இதில் கலப்படம் செய்வது படுபாதகச் செயல். ஆகவே இவ்விஷயத்தில் அரசாங்கம் கண்டிப்பான நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டுள்ளது.

## சபாஷ் வேலணை!

நேற்று முன்தினம் வேலணைக் கிராமத்திலே அரசாங்க அதிபர் திறந்து வைத்த புதிய விளை

பஜனைக்கோஷ்டி

ஆட்சிமன்றத்திலே

# 'பிர்லா' அல்ல எந்த 'பில்லா' வந்தாலும் நெசவுத் தொழிலை நசுக்கமுடியாது

## டாக்டர் தகநாயக்கா சூளுரை

நமது சபை நிருபர்
பெரி. சுந்தரலிங்கம்

சிங்கள மொழியிலே 'பில்லா' என்றால் பூச்சாண்டி என்றுதான் கருத்து. சின்னப்பிள்ளைகள் அழும்போதோ அடம்பிடிக்கும்போதோ, "அதோ 'பில்லா' வருகிறான்; பிடித்துக்கொண்டு போய்விடுவான்" என்று சில பெற்றோர்கள் பயமுறுத்திக் குழந்தைகளை அடக்குவது அன்றாடம் காணக்கூடிய காட்சி.

இப்பொழுது தி. மு. க. வுக்கு அடுத்தபடியாக — அல்லது அதற்கு இணையாக என்றுகூட சொல்லலாம் — ஆட்சிமன்றத்தில் அடிக்கடி அடிபடும் பெயர் தான் பிர்லா!

இந்திய கோடீஸ்வரரான பிர்லா, இலங்கையர்களுடன் கூட்டுச்சேர்ந்து ஒரு ஜவுளி ஆலையைத் தென்னிலங்கையிலே ஆரம்பித்தாலும் ஆரம்பித்தார், எதிர்க்கட்சியினருக்கு ம்ம சொப்பனமாக விளங்குகிறார் பிர்லா!

"அதோ பிர்லா வந்துவிட்டார்; நமது நாட்டையே சூறையாடிக்கொண்டுபோய் விடுவார்; நமது கைத்தறியாளர்களின் நெசவுத்தொழில் நசுங்கிச் செத்துவிடும்" என்று ஆட்சிமன்றத்திலே எதிர்க்கட்சியினர் 'பூச்சாண்டி' காட்டும்போது நான் முன்சொன்ன காட்சிதான் என் மனத்திரையில் பட்டது,

### சிதகாமியின் சபதம்

உள்நாட்டு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் ஆட்சிமன்றத்தில் குழு நிலையில் விவாதிக்கப்பட்டபோது பேசிய மீரிகமைத் தொகுதி எம். பி, — ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தூண்களில் ஒருவரான — திருமதி சிவகாமி ஓபயசேகரா பிர்லா என்ற இந்த பில்லாவை மனதில் வைத்துக்கொண்டுதான் எங்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால் ஜவுளி ஆலைகளை எல்லாம் நிச்சயமாகத் தேசியமயமாக்குவோம்" என்று சபதமெடுத்துக்கொண்டார்.

தமிழரசுக்கட்சித் தலைவர்— பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். எம். இராசமாணிக்கம் வழங்கிய நற்சான்றிதழின்படி, தேசிய அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்களில் சிறந்த அமைச்சரும், பண்போடு, பாகுபாடில்லாது செயலாற்றும் தன்மையுடையவரும், முதிர்ந்த அரசியல் வாதியுமான "டாக்டர் தகநயக்காவின் அமைச்சான உள்நாட்டமைச்சுவிற்கான நிதி ஒதுக்கீடுகள் இன்று ஆட்சிமன்றத்தில் குழுநிலையில் விவாதிக்கப்பட்டது,

—கைத்தறியாளர்களுக்கான நூல்விநியோகத்தில் உள்ள சிக்கல்கள்; பீடிக்கோட்டா பற்றிய புகைச்சல்; மதுபானம் உற்பத்தி மதுவிலக்கு சம்பந்தமாக அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கையில் உள்ள தடுமாற்றம், இப்படியான பிரச்னைகள் உள்ளூராட்சி அமைச்சுபற்றிய விவாதத்தில் இடம்பெற்றது.

பூரண மதுவிலக்கு வேண்டும் என்று முன்பெல்லாம் தீவிர பிரச்சாரம்செய்த டட்லியின் தலைமையிலான அரசாங்கம் மதுபான உற்பத்தியிலும், விநியோகத்திலும் தீவிர அக்கறை காட்டுவது, அதனால் வரும் வருமானத்தை அதிகரிக்க முயற்சிசெய்வதும் தம்புள்ளைத்தொகுதி உறுப்பினர் கவிஞர் ரி. பி. எம். தென்னக்கோனுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை.

தந்தை மகனுக்கும், மகன் தந்தைக்கும் சாராயம் ஊற்றிக்கொடுத்து ஒன்றாக அமர்ந்து குடித்துக் குதூகலிக்கும் இந்தக்காலத்தில், சிங்கள அரசாங்கம் குடிகெடுக்கும் குடிவிநியோகத்தில் அதனை உற்பத்தி செய்வதில் நேரடியாக ஈடுபடலாமா? பண்டைக்கால சிங்கள அரசர்கள் இப்படியா செய்தார்கள்? என்று ஆக்ரோஷத்துடன் இவர் கேட்டபோது, எங்கிருந்தோ ஒரு குரல், "துட்டகைமுனுபோன்ற அரசர்கள் கள்ளு, சாராயம் குடிக்கவில்லையா? மதுபானம் அருந்தவில்லையா? என்ற கேள்வியை எழுப்பியது.

தனிப்பட்ட அரசர்கள் குடித்துக் கும்மாளமடித்திருந்தாலும் அவர்கள் ஆட்சி, அரசாங்கம் பொதுமக்களுக்கு குடி தயாரித்துக் கொடுக்கவில்லை என்பதுதான் தம்புள்ளையின் பதில்!

மதுவிலக்கு பற்றி தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வமான கொள்கை என்னவோ, ஒரே மயக்கமாகத்தான் இருக்கிறது மன்னார் எம் பி அழகக்கோனுக்கு 'சந்திர மண்' லத்துக்குப் போய் மனிதன் திரும்பி வரும்இந்தக் காலத்தில் மதுவிலக்கு பற்றிய பேச்செல்லாம் சுத்த 'நொன்சென்ஸாகப் படாவிட்டாலும், பயனற்ற பேச்சாகத்தான் பட்டது.

காலையிலிருந்து, மாலைவரையில், காடு, கழனிகளிலே கஷ்டப்பட்டு, நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபட்டு உழைக்கும் ஏழைக் கமக்காரர்களுக்கும் தொழிலாளர்களுக்கும், அவர்களது களைப்பையும், கஷ்ட வாழ்க்கைநிலையையும் மறக்கடிக்கும் அருமருந்துதான் சகலரோக நிவாரணிகளிலும்சாராயமும்; ஆகவே கள்ளு சாராயவிற்பனையைத் தடைசெய்யவோ, கட்டுப்படுத்தவோ முயலாமல், அதிகம் அதிகமான தவறணைகளை திறக்கவேண்டும் என்பதுதான் மன்னார் எம் பி, தமிழரசுக்கட்சி எம் பி அழகக்கோனின் வாதம்.

இதன் விளைவாக இதன் அடிப்படையில் அழகக்கோன் விடுத்த வேண்டுகோள், மன்னார் பகுதியில் இப்பொழுது இருக்கும் ஒரேயொரு சாராயத் தவறணை போதாது இன்னும் இரண்டு மூன்று தவறணைகளாவது திறக்கவேண்டும் என்பதே.

மரவரிமுறையில் கள்ளிறக்கும் திட்டத்தை மன்னார் மன்னார் பகுதிக்கும் விஸ்தரிக்குமாறு கேட்ட எம் பி, "யாழ்ப்பாணத்தில் மரவரி முறையில் கள்ளிறக்கும் திட்டம் அமுலிலிருப்பதால்தான் அந்தப் பகுதியில் வாழும் கள்ளிறக்கும் தொழிலாளர்கள் நவீன முறையிலான வீடுகள் கட்டி தங்கள் குழந்தைகளுக்கு கல்வி கற்பித்து செல்வச் சிறப்போடு வாழ வசதிபெற்றிருக்கிறார்கள் என்று மேற்கோள் காட்டினார்,

### சாராய உற்பத்தி

டாக்டர் என். எம் முக்கு, அரசாங்கத்தின்கலால் இலாகாதான் 'கசிப்பு' உற்பத்தியில் முன்னணி வகிப்பதாகத் தெரிகிறது,

8 ரூபாய்ச் சாராயம் தயாரிப்பது எப்படி தெரியுமா? 'எல்லாம் தெரிந்த' டாக்டர் இதோ தயாரிப்பு முறையை விளக்குகிறார்.

3 போத்தல் 'ஸ்பிரிட்'
1 போத்தல் சாராயசாரம்
1 போத்தல் தண்ணீர்

இந்த மூன்றையும் கலந்து 15 பாத்தல் 8ரூபாய் சாராயம் தயாரிக்கிறார்களாம் டாக்டருக்குப் பக்கத்திலிருந்த பீட்டர் கெனமன் 'கள்ளத்தனமாகத்தயாரிக்கிறவர்கள் அரசாங்கத்தைவிடக் குறைவாகத்தான் தண்ணீர் கலக்கிறார்கள் அதனால் தான்அதில் வெறிஅதிகம் என்று சொல்லிக் கொடுத்தார்.

'மொலாஸஸ்' கலந்த 'ஸ்பிரிட்' கலந்த சாராயம் மனித உறுப்புகளுக்கும், உடலுக்கும் பெரும் தீங்கு விளைவிக்கும் நஞ்சுக்கு ஒப்பானது என்று மருத்துவ டாக்டர்களின்ஆதாரத்துடன் பேசிய அரசியல்துறை டாக்டர் என், எம், அரசாங்கத்தரப்பில் பின்வரிசை ஆசனங்களில் அமர்ந்திருந்த நண்பர்களைப் பார்த்து 'நண்பர்களே இனிமேல் சாராயம் குடிக்கும்போது கவனமாக இருங்கள்' என்று அறிவுரை கூறத்தவறவில்லை.

பதில்கூற எழுந்த டாக்டர் தகநாயகா, திருமதி சிவகாமி நீனு ஒபயசேகராவின் சபதத்தை மனதிற் கொண்டுபில்லாஇல்லை எந்த

# 75 ஆண்டு விழாக்காணும்

# ஐயாறன் எழுதுவது

"எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டும் என்றே காலமெல்லாம் வாழ்ந்தவர், எல்லோரையும் கண்ணீர் பெருக்கி கதறி அழும்படி விட்டுவிட்டு மறைந்துவிட்டார்" என்று இவ்வாரம் வெளியான 'ஆனந்த விகடன்' பத்திரிகை அதன் ஒப்பற்ற ஆசிரியப் பெரியாரான எஸ். எஸ். வாஸன் அவர்களின்மறைவைப்பற்றி எழுதியுள்ள ஓர் உருக்கமான தலையங்கத்தில் இப்படிக் குறிப்பிட்டிருக்கின்றது. முதல்பக்கத்திலே கறுப்புப் பின்னணியில் 'விகடன்' சோகமே உருவாக நின்றுகொண்டுள்ள படம்.

"பத்திரிகை விற்பனையாளராகவும், விளம்பரம்சேகரிப்பவராகவும், எழுத்தாளராகவும். பத்திரிகாசிரியராகவும் படிப்படியாக உயர்ந்து, சமூகத்தில் தனக்கென்று ஒரு தனிஇடத்தைக் தேடிக்கொண்ட" வாஸன் அவர்கள், ஏழ்மை நிலையிலிருந்து வாழ்க்கையைத் தொடங்கி, தம்முடைய உழைப்பால் முன்னேறி சமுதாயத்தில் முதலிடம் பெற்றார். பத்திரிகை விற்பனை செய்யும் ஒரு பையனைத் தெருவில் பார்த்தால், நாம் அலட்சியம் செய்யப்படாது. ஒருநாள் அவனும் ஒரு வாஸனாக உயரக்கூடுமல்லவா? வாஸனின் அரிய வாழ்க்கை ஏழை வாலிபர்களுக்கெல்லாம் புது நம்பிக்கை அளிக்கும் ஓர் எடுத்துக்காட்டு.

வெளிநாட்டாரும் புகழும்படியாக ஒரு தமிழ் வாரப் பத்திரிகையைச் சிறப்பாக நடத்திய அவர், அந்த அனுபவத்தின்மீதுதிரைப்படஉலகிலும் புகுந்து, முதன்மை பெற்று, பலமேலான தமிழ்ப்படங்களை அளித்திருக்கின்றார். சென்னையிலே நடைபெற்ற உலகத் தமிழ் விழாவிலே, ஒருநாள் இரவு சிவாஜி கணேசன் அளித்த விருந்தின்போது அவரைக் கடைசியாகச் சந்தித்தேன். அரைக்கை கதர்ச்சட்டை, மேலே நான்குமுழத்துண்டு, அரையில் நான்குமுழக் கதர் வேட்டி. இவ்வளவு எளிமையாகக் காட்சி கொடுத்த அந்தக் கோடீஸ்வரர், தான் 'விகடனை' ஆரம்பிக்கநேரிட்ட கதையெல்லாம் சொன்னார்.

இப்போது பொறுப்பை எல்லாம் தன் மகனிடம் ஒப்புவித்துவிட்டு ஒதுங்கிவிட்டதாகவும், எல்லாம் மகன் பார்த்துக்கொள்வதாகவும் திருப்தியுடன்கூறி அவர் உள்ளம் குளிர்ந்துகொண்டுவிட்ட... கெங்கும் லட்சக்கணக்கான மக்களுக்கு தொடர்ந்து இன்பமூட்டிவரச் செய்துவிட்டு மறைந்துள்ளவாஸன் அவர்களுக்கு ஈழத்தமிழர் சார்பாக அஞ்சலி தெரிவிக்கின்றேன்.

தன் சொந்த முயற்சியால் உயர்ந்தவர்களைப் பெரியார்கள் என்று கூறி புகழ்பெற்ற எழுத்தாளரான வ ரா. அவர்கள் நகைச்சுவை மன்னன் என். எஸ் கிருஷ்ணன் முதலியவர்களைப்பற்றிய வாழ்க்கையை ஒரு நூலாக வெளியிட்டிருந்தார். இதன்படி எஸ். எஸ் வாசன் அவர்கள் தமிழ்நாட்டுப் பெரியார்களில் ஒரு சிறந்தவரல்லவா?

0 0 0

நல்லூர் திருவிழாவின்போது, சுற்றிலும் பல இடங்களில் தண்ணீர்ப் பந்தல் தருமம் நடைபெறுவதும், இரவு வெகுநேரம்வரை ஒலிபெருக்கிகள் அங்கு முழங்குவதும் சர்வசகஜம்.

இருநாட்களுக்கு முன்பாக பல தண்ணீப் பந்தல்களில் ஒலிபெருக்கி எதுவும் காணோம். சினிமா டப்பாப் பாட்டுகளை ஒலிபெருக்கக்கூடாதென்று பொலிஸ் அதிகாரி உத்தரவிட்டதன் பயனே இதுவென்றறிந்தேன். இதற்காக அந்த அதிகாரிக்கு நன்றிகூற வேண்டும். பக்தியை வளர்க்கவேண்டிய திருவிழாக்களில், 'டப்பா' பாட்டுகளைப்போட்டு மக்கள் உள்ளத்தைக் கெடுப்பது ஒரு பாவமல்லவா?

ஒரு பந்தலில் ஒரு பெண்மணி இனிமையாகப் பக்திப் பாடல்களைப்பாடியது, பெங்களூர் ரமணியம்மாளை நினைவூட்டியது. ஏராளமானவர்கள் கூடியிருந்து ரஸித்தார்கள்.

ஈழத்திலே ஏராளமான பாடகர்கள் இருக்கின்றார்கள். அவர்களைக்கொண்டு இவ்வித சமயங்களில் ஏன் பாடச்செய்யக்கூடாது? இதனால் பக்தி வளர்வதுடன் கலைஞர்களும் வளர்வார்கள்.

0 0 0

ஏறுமயிலேறி விளையாடும் முகம் ஒன்றே, ஈசனொடு ஞானமொழி பேசுமுகமொன்றே, கூறுமடியார்கள் வினை தீர்த்தமுகமொன்றே, குன்றுருவவேல்வாங்கி நின்றமுகமொன்றே, மாறுபடு சூரரை வதைத்தமுகமொன்றே, வள்ளியைமணம் புணர வந்தமுகம் ஒன்றே, ஆறுமுகமான பொருள் நீயருளல்வேண்டும் ஆதிஅருணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபாஷ் வேலணை!

நேற்று முன் தினம் வேலணைக் கிராமத்திலே அரசாங்க அதிபர் திறந்து வைத்த புதிய விளையாட்டு மைதானத்திலே கிராமத்து வாலிபர்கள் தாச்சியும், கைப்பந்தாட்டமும் உற்சாகமாக விளையாட யாழ் அரசாங்க அதிபர் உள்ளிட்டுப் பொதுமக்கள் பலரும் கூடி ரஸித்தனர் இவ்விதம் தங்கள் கிராமத்தைப் பல விதங்களிலும் அபிவிருத்தி செய்து புத்துயிர் அளித்து வரும் அந்தக் கிராமசபைக்கு "சபாஷ்" கூறி பாராட்ட வேண்டும்

நாட்டில் விளையாட்டுகளை அபிவிருத்தி செய்ய தனியாக ஓர் அமைச்சரை நியமித்தது முதல், பல நகரங்களிலும் கிராமங்களிலும் விளையாட்டுக்கான வசதிகள் முன்னைவிட அதிகரித்துள்ளன தான் என்றாலும் விரும்பத்தக்க அளவுக்கு முன்னேற்றமில்லை கிராமச் சபைகள் முன்வந்து, தங்களுக்குத் தாங்களே உதவி செய்துகொள்ள முற்பட்டால் தான், அரசாங்க உதவியும் கிடைக்கக்கூடியதாக இருக்கும்

கிராமங்களிலே பொதுமக்களும், சிறப்பாக வாலிபர்களும் பல விளையாட்டுகளிலும் ஈடுபடுவதால் தங்கள் தேக சுகத்தைப் பேணுவதுடன் ஒற்றுமையையும் நல்லுறவையும் ஏற்படுத்த முடியும்; நோய்கள் குறைந்து மக்களுக்கு நல்ல பொழுது போக்கும் கிடைக்க அது வழி செய்வதாகும் விளையாட்டு மைதானத்துக்கான நிலத்தை பூமிதானமாகச் செய்யும் கிராமவாசிகள் அக்கிராம மக்களின் நன்றிக்குப் பாத்திரமாவார்கள் அரசாங்கமும் கூடுமான உதவியைச் செய்து கொடுப்பதுடன் கிராம மக்களும் சிரமதானம், சம்பத்தானம் மூலம் தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொண்டால் கிராமம் ஒரு குடும்பம் போல் வளர்ந்து, கிராம வாழ்க்கையே பலவிதங்களிலும் சிறப்படைந்து கிராம ராஜ்யம் ஏற்பட வழி பிறக்க முடியும்

## பஜனைக்கோஷ்டி

யாழ்ப்பாணம், திங்கள்

இணுவில் 'சிவகாமசுந்தரி தியாக சத்திய ஜீவன சன்மார்க்க' இயக்கத்தினர் நடை பஜனைக் கோஷ்டி ஒன்று புதன்கிழமை அதிகாலை 4 மணிக்கு இணுவில் சிவகாமி அம்மன் சன்னிதியிலிருந்து காரைக்கால் தியாகராசா சுவாமிகள் தலைமையில் புறப்பட்டு காங்கேசன்துறை வீதி வழியாக உப்புமடம் சந்தியால் திரும்பி கொடுத்தூக்கி ஆலடியை அடைந்து அங்கிருந்து பலாலி வீதியால் நல்லூர்க் கந்தன் சன்னிதியை அடையும்

0 0 0

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவத்தையிட்டு நல்லூர் சிவபூதராயர் ஆலய பஜனைக் கோஷ்டியினர் இன்று (8-ம்திகதி) தொடக்கம் முருகநாமபஜனை நடத்துவார்கள்

## புதிய உறுப்பினர்

உடுப்பிட்டி, ஞாயிறு

தென்கருணை, மேல்கரவை இளைஞர் மன்றத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. செ. சிவஞானசுந்தரம், உபதலைவர்: திரு. கு. பாலகிருஷ்ணன், செயலாளர்: திரு. க. மகேஸ்வரன், உபசெயலாளர்: திரு சி. நாகேந்திரம், தனதிகாரி: திரு. இ. அருளம் நாதன்.

மன்றப் போஷகர்களாக உடுப்பிட்டி எம். பியும், உபசபாநாயகருமான திரு. மு. சிவசிதம்பரம், பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா, திரு. மன்னவன் கந்தப்பு, திரு. பொ. தம்பு, திரு. தோமஸ்ஈப்பென் (வதிரி திரு. இருதயக்கல்லூரி அதிபர்). ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கிராமத்தைச் சிரமதான மூலம் சீரமைப்புச் செய்வதெனவும், சமூகமுன்னேற்றத்திற்கான பணிகளுக்கு ஆதரவு கொடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 75 ஆண்டு விழாக்காணும் அருணோதயக் கல்லூரி

— பண்டிதர் க. சிவசம்பு —

அருணோதயக் கல்லூரி தனது எழுபத்தைந்தாண்டுகளைப் பூர்த்தி செய்து இன்று விழாக் கொண்டாடுகின்றது இக்கல்லூரி அளவெட்டிக்கிராமத்தின் மத்தியிலே ஒரு கலைக்கோவிலாய் விழாக் கோலம் பூண்டு விளங்குகிறது.

அளவெட்டிக் கிராமம் தெய்வபக்தியும் சைவசமயப்பற்றும் உள்ளவர்கள் வாழும் கிராமம். கோவில்கள்பல ஆங்காங்கே விளங்குகின்றன. சைவபாடசாலைகள் நான்குள அவற்றுள் அருணோதயக் கல்லூரியும் ஒன்றாகும் அங்கு கற்றவர்கள் சிறந்த அறிவும் பண்பும் உடையவர்களாய் நல்ல நிலையில் இருக்கிறார்கள்: எந்தப் பெரிய உத்தியோகத்தை வகித்தாலும் அவர்கள் சைவசமய ஆசாரங்களைப் பேணுகிறார்கள். இது இன்றைக்கு உள்ள நிலை.

இன்றைக்கு 75 ஆண்டுகளுக்குமுன் இருந்த நிலை வேறு. ஆங்காங்கே கோவில்கள் இருந்தாலும் இந்தப் பெரிய கிராமத்தில் இரண்டு சிறு கிறிஸ்தவ பாடசாலைகளே இருந்தன. அங்கே எழுத வாசிக்கக் கற்றுக் கொண்டமாணவர்கள் வீடுகளிலே சமய நூல்களையும் தமிழ் நூல்களையும் பெரியோர் வாயிலாகக் கற்று வந்தனர்,

இந்த நிலையை மாற்ற 1894ம் ஆண்டில் வேறெவருடைய உதவியையும் எதிர்பாராமல் தனிமுயற்சி செய்தார் திரு. நா அருணாசல உடையார் அவர்கள் அவரது முயற்சியினாலேயே இன்றைக்கு ஆயிரம் மாணவர்களைக் கற்பிக்கும் அருணோதயக் கல்லூரி உதயமானது.

தொடக்க காலத்தில் திரு மு செல்லப்பாச் சட்டம்பியாரும், திரு அ பரமுச்சட்டம்பியாரும் இங்கு கல்வி கற்பித்தனர் அவர்கள் ஆழமான தமிழறிவை மாணவர்களுக்கு ஊட்டினர் இந்த நிலையிலே நான்கு வருடகாலம் கழிய வண்ணார் பண்ணையைப்பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு குழந்தைவேலுச் செட்டியார் சின்னத்தம்பிச்செட்டியார் தலைமையாசிரியராகவும் ஆங்கில ஆசிரியராகவும் கடமையேற்று ஆங்கில வித்தியாசாலையாகவும் வித்தியாபகுதியின் அங்கீகாரம் பெற்றுக் கொண்டார் செட்டியார் அவர்களின் கற்பித்தல் நலனைப்பற்றி அவரிடம் கல்வி கற்ற முதியவர்கள் இன்றும் நமக்குச் சொல்லிச் செட்டியாரை வாழ்த்துவார்கள் அப்பொழுது 5ம் வகுப்புவரை மட்டுமே கற்பிக்கப்பட்டது அவரோடு கற்பித்த திரு க இளையதம்பி, திரு க அப்பாக்குட்டி திரு அ பொன்னம்பலம் ஆகியவர்களும் கற்பித்ததாகவும் நாம் அறிகிறோம்

1913 ம் ஆண்டில் சண்டிருப்பாய் வாசியான திரு க சோமசுந்தரம் டி ஏ அவர்கள் தலைமையாசிரியராய் எட்டாம் வகுப்புவரை வகுப்புக்களை நடத்தினர் 1919ம் ஆண்டில் திரு த சின்னத்தம்பி அவர்கள் தலைமையாசிரியராய்க் கடமை ஏற்றார் உடையார் அவர்களின்புதல்வர் திரு நா அ சுப்பையா அவர்கள் ஆசிரியராகவும் முகாமையாளராகவும் ஆனார் இந்நிலை ஏறத்தாழ 20 வருடம்வரை இருந்தது இக்காலத்தில் இக் கல்லூரி வடபகுதியிலே தலைசிறந்த ஆங்கில பாடசாலையாகவித்தியாபகுதியினரால் கணிக்கப்பட்டது இதற்குக் காரணம் திரு த சின்னத்தம்பியவர்களின் ஊக்கமும் திறமையுமேயாகும்

அவருடைய திறமையை விளக்கும் உதாரணமாக நமது இன்றைய அதிபர் திரு. ச. சிதம்பரப்பிள்ளை அவர்கள் விளங்குகிறார்கள் இன்றைய அதிபர் திரு. சின்னத்தம்பியவர்களிடம் மாணவனாயிருந்து கல்வி கற்று அவரோடு உடனாசிரியராய்ப் பல ஆண்டுகள் கற்பித்தவர். அந்தப்பழக்கத்தினாலேயே 60 ஆண்டு நிரம்பிய இந்த வேளையிலும் அயராது கல்லூரிக்கு உழைக்கின்றார்.

சின்னத்தம்பியவர்கள் இளைப்பாறியபின் காரைநகர் திரு. பி நவரத்தினம் அவர்களும் பின் திரு எஸ் கிருஷ்ணசாமிஐயர் அவர்களும் அதிபர்களாயிருந்து நல்ல கல்விச் சேவை செய்தனர். ஆனால் எட்டாம் வகுப்புவரையுமே வகுப்புகள் இருந்தன.

1946-ம் ஆண்டு திரு சுப்பையா அவர்களின் புதல்வரும் உடையார் அவர்களின் பேரனுமாகிய திரு சு. சிவசுப்பிரமணியம் அவர்கள் சர்வகலாசாலையில் விஞ்ஞான பட்டம் பெற்று ஆசிரியராயும் முகாமையாளராயும் அதிபராயும் அயராதுழைத்து இன்றைய நிலைக்குக் கொண்டு வந்தார். அவரது நன்முயற்சியாலேயே இப்பொழுது 10-ந் தரம் எனப்படும் க. பொ. த. ப. வகுப்பு இரசாயன ஆய்வு கூடம், பௌதிக ஆய்வு கூடம், உயிரியல் ஆய்வு கூடம், விளையாட்டு மைதானம், ஆரம்ப பிரிவுக் கட்டிடம் நிர்வாகக் கட்டிடம், வாசிகசாலை, சாரணர் பிரிவு, சைவமாணவர் மன்றம், சங்கீத கலாமன்றம் பலவித விளையாட்டுக் கோஷ்டிகள் என்பன உருவாயின. இவற்றைக் கண்ட வித்தியாபகுதியினருக்கு மனம் பொறுக்க வில்லைப்போலும். அவருக்கு முதலாந்தர அதிபர் பதவி கொடுத்து முதலாந்தரக் கல்லூரிக்கு மாற்றி விட்டவர். ஆனாலும் இன்றைய அதிபர். தான் இளைப்பாறமுன் கல்லூரியில் செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம் செய்து விடவேண்டுமென்று இராப்பகலாய் உழைத்து இன்று விழாக் கொண்டாடும் நிலைக்குக் கொண்டு வந்தார். கல்லூரியில் ஈடுபட்டுழைத்தவர்கள் எல்லோரும் பொது நலம் கருதியே இழைத்தார்கள் என்பதை நினைத்துப் போற்றுகின்றோம். அருணோதயக் கல்லூரி என்ன சாதித்தது என்பதை விழாமலர் நமக்குக் காட்டுகின்றது. நாம் இதுவரை காலமும் கண்டு கேட்டறிந்திராத பல மேதைகளை நம் கல்லூரி உருவாக்கியது என்பதை அறிய நம் கலைக் கோயிலைப் போற்றாமலிருக்க முடியுமா?

கூறத்தவறவில்லை.

பதில்கூற எழுந்த டாக்டர் தகநாயகா, திருமதி சிவகாமி நீலா ஒபயசேகராவின் சபதத்தை மனதிற்கொண்டுபில்லாஇல்லை எந்த 'பில்லா' வந்தாலும் கைத்தறி நெசவுத்தொழிலை நசுக்கவிடமாட்டேன் என்றால் இயன்றமட்டும் கைத்தறியாளர்களுக்குநிவாரணம் வழங்கச் சித்தமாயுள்ளேன் என்று சூளுரைத்தார்.

டாக்டர் தகநாயகா அமைச்சராக இருந்தாலென்ன, சாதாரண உறுப்பினராக இருந்தாலென்ன, எடுத்துக்கொண்ட எந்தக்காரியத்தையும் முழுமனதுடன் செய்து முடிக்கும் ஆற்றலும் அதற்கான திறமையும் தகைமையும் உடையவர் என்பதை எதிர்க்கட்சியினரும் எவ்வித தயக்கமுமின்றி ஏற்றுக் கொள்வர்.

இதனால் தான் எதிர்க்கட்சியினர் எடுத்துச் சொன்ன முறைப்பாடுகளை யெல்லாம் ஆழ்ந்த பரிசீலனை செய்தே தேவையான நடவடிக்கை எடுப்பேன் என்ற உறுதியை டாக்டர் தகநாயக்கா அளித்த போது கைதட்டி ஆரவாரத்துடன் வரவேற்ற எதிர்க்கட்சியினர் அவரது அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகளையும் நிறைவேற்றி வைத்தனர்.

வேலணை

## கிராமசபைக்கு அரசாங்கஅதிபர் பாராட்டு

வேலணை, ஞாயிறு

'அரசாங்கம் கிராமசபைகளுக்கு கூடிய பொறுப்புகளை வழங்கியுள்ளது போதிய பொருளாதாரம் இல்லாததால் சில வேலைகளை அரசாங்க நன்கொடை மூலமே கிராமசபைகள் செய்யவேண்டியுள்ளது. ரூபா 5000 வருமானமுள்ள இக்கிராமசபை ரூபா 4000 செலவில் விளையாட்டரங்கைத் திறப்பதற்கு எடுத்த முயற்சி பாராட்டத்தக்கது' என வேலணைக் கிராமசபை விளையாட்டு மைதானத் திறப்பு விழாவில் பேசிய யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு பீற்றர்ஸ் கூறினார். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு ஏ. ஏ. ஜோசப் தலைமையில் விழா நடைபெற்றது.

உதவி ஆணையாளர் பேசுகையில் மக்களின்உடலுறுதி தேக ஆரோக்கியத்துக்கு விளையாட்டுத்துறை இன்றியமையாதது எனக் குறிப்பிட்டார்.

மன வேற்றுமைகளை மறந்து மக்கள் ஒன்றுபடும் இடம் விளையாட்டு மைதானம் என வேலணைக் கி. ச. தலைவர் திரு க. சதாசிவம் சொன்னார்,

திரு கே. பி. ஹரன் பேசுகையில் விளையாட்டுக்களில் கலந்து கொள்வதன்மூலம் மக்களிடையே உள்ள குரோதங்கள் தீருமெனக் குறிப்பிட்டு ஆண்களைப்போல் பெண்களும் விளையாட்டுத் துறையில் ஆர்வம் காட்ட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

தீவுப்பகுதி எம். பி. திரு வ. நவரத்தினம் பேசுகையில் தாச்சி போன்ற தேசிய விளையாட்டுக்களை நான் அபிவிருத்தி செய்ய விரும்புகிறேன் எனக் குறிப்பிட்டார்.

ச. ச, நிலையங்களின் சமாசத் தலைவர் திரு சி. இராசரத்தினம் நன்றியுரை கூறினார்.

[illegible] எல்லாம் தன் மகனிடம் ஒப்புவித்துவிட்டு ஒதுங்கிவிட்டதாகவும், எல்லாம் மகன் பார்த்துக்கொள்வதாகவும் திருப்தியுடன்கூறி அவர் உள்ளம் துறவுகொண்டுவிட்டதைக் கூறாமல்தெரிவித்தார்.

வாராவாரம் அவரது பத்திரிகை தமிழ்கூறும் நல்லுல

[illegible] முகமொன்றே, மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே, வள்ளியைமணம் புணர வந்தமுகம் ஒன்றே, ஆறுமுகமானபொருள் நீயருளல்வேண்டும் ஆதிஅருணசலம் அமர்ந்தபெருமாளே.

— அருணகிரியார்

## புலவர் கோவிந்தனுக்கு நாளை யாழ். நகரில்வரவேற்பு

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழ்நாடு சட்டசபை சபாநாயகர் புலவர் கா. கோவிந்தனுக்கு நாளை மாலை யாழ்ப்பாணம் மாநகரசபையின் சார்பில் யாழ்ப்பாணத்தில் வரவேற்பளிக்கப்படுகின்றது.

யாழ். நகர முதல்வர் திரு. சி. நாகராஜா தலைமையில் நடைபெறும் இவ்வைபவம் நாளை மாலை 5-30 மணிக்கு யாழ். நகர மண்டபத்தில் நடைபெறும்.

உடுப்பிட்டி எம். பி. யும் உபசபாநாயகருமான திரு. மு. சிவசிதம்பரம், வட்டுக்கோட்டை எம். பி. யும் தமிழரசுக்கட்சி செயலாளருமான திரு. அ. அமிர்தலிங்கம் யாழ். நகர துணைமுதல்வர் திரு. ஆ. துரைராஜசிங்கம் ஆகியோர் இவ்வைபவத்தில் சொற்பொழிவாற்றுவார்கள்

நேற்று முன் தினம் கொழும்பு வந்துசேர்ந்த புலவர் கோவிந்தன் இன்று திருமலையில் நடைபெறும் திருவள்ளுவர் 2000-ம் ஆண்டு விழாவில் கலந்து கொண்ட பின்னர் நாளைக் காலை யாழ்ப்பாணம் வருவார் புலவர் கோவிந்தனுக்கு தேநீர் விருந்து, பொது வரவேற்புகளை யாழ்ப்பாணத்தில் அளிக்கவும் பல சங்கங்கள் ஏற்பாடுகள் செய்துவருகின்றன (கா நி)

## 13 வயது யுவதியைக் காணவில்லை

மல்லாகம், ஞாயிறு

பருவமடைந்த இளம் பெண்ணான தனது 13வயது மகள் வீட்டிலிருந்து திடீரெனக் காணவில்லை என பலாலி வாசியான ஒருவர் காங்கேசன்துறைப்பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

காணாமல் போயுள்ள தனது இளையமகள் சகோதரியின் கணவருடன் போயிருக்கலாம் எனச் சந்தேகிப்பதாயும், யுவதி பருவமடைந்து 23 நாட்கள்தான் என்றும், இவரின் ருதுசாந்தி சடங்குகளுக்கு ஏற்பாடுகள் செய்து உறவினர்களுக்கு அழைப்புகள் அனுப்பி விட்டதாகவும் தந்தையின் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிசார் விசாரணை நடத்துகின்றனர்.

## விபத்தில் வாலிபர் மரணம்

அல்லைப்பிட்டி, ஞாயிறு

வேலணை கிழக்கைச் சேர்ந்த முத்ததம்பி பேரின்பநாயகம் என்னும் வாலிபர் யாழ்ப்பாணத்திலிருந்து விறகேற்றிவரச் சென்ற லொறியில் பிரயாணம் செய்யும் போது பளைக்கண்மையில் லொறியிலிருந்து தவறுதலாக வீதியில் வீசப்பட்டு துடிதுடித்து மரணமானார்.

இது சம்பந்தமாக விசாரணை நடாத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி விபத்து மரணமெனத் தீர்ப்பு வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org